# உலக குரு வள்ளலார்




ஆன்மீக செம்மல் ஞானசற்குரு சிவ செல்வராஜ்

தங்க ஜோதி ஞானசபை அறக்கட்டளை

சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்

கன்னியாகுமரி.

# சமர்ப்பணம்

இரகசியம் என்றுரைத்த மந்திரோபதேசத்தை
பரசியம் ஆக்கி எல்லோரும்
பரமபதம் அடைய வழிகாட்டிய வள்ளல்
ஸ்ரீ இராமானுஜர் பொற்பாதகமலங்களுக்கு
இந்நூல் சமர்ப்பணம்



# உலக குரு வள்ளலார்



ஆன்மீகச்செம்மல் ஞான சற்குரு

**சிவ செல்வராஜ்**




தங்க ஜோதி ஞானசபை அறக்கட்டளை

சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்

17/49P, கலைஞர் குடியிருப்பு,

கன்னியாகுமரி - 629 702

www.vallalyaar.com

# நூல் விபரம்


| | | |
|---|---|---|
| நூல் | : | உலக குரு வள்ளலார் |
| பொருள் | : | வாழ்க்கை வரலாறு |
| ஆசிரியர் | : | ஆன்மீக செம்மல் ஞான சற்குரு சிவசெல்வராஜ் |
| வெளியிடுவோர் | : | தங்க ஜோதி ஞான சபை அறக்கட்டளை<br>சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்<br>17/49 - P, கலைஞர் குடியிருப்பு<br>கன்னியாகுமரி - 629 702<br>www. Vallalyaar. Com. |
| வெளியீடு | : | திருவருட்பிரகாச வள்ளலார் 191-வது குருபூஜை<br>புரட்டாசி மாதம் சித்திரை நட்சத்திரம் 06-10-2013 |
| முதல் ஒன்பது பதிப்புகள் | : | 47,000 பிரதிகள் |
| பத்தாம் பதிப்பு | : | 5000 பிரதிகள் (03-11-2024) |
| உரிமை | : | S.S. சுயம் ஜோதி |
| காணிக்கை | : | ரூ. 20 |

**தங்க ஜோதி ஞானசபை அறக்கட்டளை**
**சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்**
**கன்னியாகுமரி**

அச்சிட்டோர் :நாஞ்சில் ஆப்செட் பிரிண்டர்ஸ்
நாகர்கோவில் - 629001.

# சிவசெல்வராஜ் எழுதிய "கண்மணிமாலை" யை வாழ்த்திய வள்ளல் பெருமான்!

1992-ல் வள்ளல் பெருமான் அடியேனை "கண்மணிமாலை" என்னும் ஞான நூலை எழுத வைத்தார்! காலங்காலமாக எல்லோராலும் மறைத்து இரகசியமாக கருதப்பட்ட ஞானத்தை கண்மணிமாலையில் வெட்ட வெளிச்சமாக எழுதி வெளியிட வைத்தார் வள்ளல் பெருமான்! இது ஓர் ஆன்மீக புரட்சி என்றே கூறுவேன்! இன்றும் எம்மைப் போன்று வெளிப்படையாக சொல்வார் யாருமில்லை! வள்ளலார் கொடுத்த ஊக்கம் அடியேனுக்கு!

150 ஆண்டுக்கு பிறகு "கண்மணிமாலை" என்றொரு நூல்வரும் என கருதி வள்ளல் பெருமான் அன்றே திருவருட்பாவில் ஒரு கவி பாடியுள்ளார்! இது யான் பெற்ற பெரும் பாக்கியம்! இந்த பிறவியே புனிதம் அடைந்ததாக கருதுகிறேன்!

"கண்மணிமாலை"யின் பெருமையை வள்ளல் பெருமானே போற்றுகின்றாரெனில் அதை எழுதத் தூண்டி - எமக்கு அருள் புரிந்த அருள் வள்ளல் ஞானவள்ளல் திருவருட் பிரகாச வள்ளலார் இராமலிங்க சுவாமிகளுக்கு நான் எப்படி நன்றி சொல்வேன்! அவர் செய்த பணியை எம்மை செய்ய வைத்துள்ளார்! அவர் இட்டபணியை செய்வதேயாம் செய்யும் காட்டும் நன்றியாக கருதுகிறேன்!

திருவருட்பா இரண்டாம் திருமுறை - திருச்சாதனத் தெய்வத்திறம் - 2வது பாடல்

கண்ணுதலே நின்அடியார் தமையும் நோக்கேன்
**கண்மணிமா லைக்**கெனினும் கனிந்து நில்லேன்
பண்ணுதல்சேர் திருநீற்றுக் கோலம் தன்னைப்
பார்த்தேனும் அஞ்சுகிலேன் பயனி லாமே
நண்ணுதல்சேர் உடம்பெல்லாம் நாவாய் நின்று
நவில்கின்றேன் என்கொடிய நாவை அந்தோ
எண்ணுதல்சேர் கொடுந்தீயால் சுடினும் அன்றி
என்செயினும் போதாதே எந்தாய் எந்தாய்.

வேணும் சுபம்

ஞானசற்குரு

## ஸ்ரீசிவஸ்ரீ சிவசெல்வராஜ் அவர்களின் பொன்விழாவின் போது அன்பர்கள் வழங்கிய வாழ்த்துப்பா!

பூரணமாய்ப் பூத்தெழுந்த புண்ணியமெய் மாமலரின்
புகழ்விளங்க வந்த அய்யனே
புருவநடுப் பொட்டினிடைப் புத்தமுதப் புனல்பெருகப்
புதையலான ஞான மெய்யனே
மாரணத்தை வெல்லுகின்ற மாமணியின் சாட்சிதனை
மானுடர்க் களிக்க எண்ணியே
மாதவத்தி லாழ்ந்துஞான மன்றிலேறி கனிபறித்த
**மாகுரு சிவசெல்வ ராஜரே**
காரணமாய் நான்குயுகக் காரியமும் ஆற்றிடவே
கருமணியுள் கனலு மாகியே
கருவரையும் கல்லரையும் காத்தருளும் கடவுளெனக்
கண்கலந்த வான வட்டமே
ஆரணமாய்ச் சிரசிடையில் அகரமாகி நின்றொளிரும்
ஆஃத்துணர்த்த வந்த செல்வமே
அடிபிடிக்க அமரமென்ற அறிவுணர்த்தி ஞானமீயும்
அற்புத மெய்ஞ்ஞான குருபரா!

## ஞானசற்குரு ஸ்ரீசிவஸ்ரீ சிவசெல்வராஜ் அவர்களின் பொன்விழாவின் போது அன்பர்கள் வழங்கிய வாழ்த்துப்பா!

இத்தனைநாள் ஏங்கிநின்ற இதயமதை மாற்றுவிக்க
இங்கெழுந் துதித்த ஜோதியே
ஈருதய முத்தொளியின் இணையடிகள் சுட்டிஎமை
இறைவனுள் பதித்த ஆதியே
பித்தனாகி வெந்தழிந்த பிறவிதுயர் போக்குகின்ற
பிரம்மமான பிரணவ நாதமே
பேசுகின்ற பேச்சடக்கிப் பேசுமுயர் மௌனமதைப்
பேசவைத்த மூல வேதமே
எத்தனைநாள் செய்தவமோ!? எம்உணர்வில் நீர்கலந்து
எமையளந்து வைத்த ஞானியே
எனதிழந்து அவனாகும் ஏற்றமதில் ஏற்றுவித்த
இருநிலத்து வான ஏணியே
சித்தனாக்க செம்பொருளை சுட்டுஎமை சுயமாக்கும்
**சிவசெல்வ ராஜ வள்ளலே**
சீர்வளர்த்து செழுமையினால் சிவநெறியை தான்வளர்க்க
சிவகுருவாய் வந்த அண்ணலே!

## ஆன்மீக செம்மல் ஞானசற்குரு சிவசெல்வராஜ் அருளிய மெய்ஞ்ஞான நூற்கள்

உலகில் இதுவரை இரகசியமாக இருந்து வந்த ஞான இரகசியங்கள், பரிபாஷை விளக்கங்கள் எல்லாம் இந்நூற்களில் எளிதாக புரியும்படி எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

1. கண்மணி மாலை
2. அருள்மணி மாலை
3. ஸ்ரீ பகவதி அந்தாதி
4. அஷ்டமணி மாலை - 8 நூற்கள்
5. ஜோதி ஐக்கூ அந்தாதி
6. சனாதன தர்மம்
7. வள்ளல் யார்
8. இயேசு எழுபது
9. ஞானக்கடல் பீர்முகமது
10. திருவருட்பா - 4 பாகங்கள்
11. சாகாக் கல்வி
12. மந்திரமணி மாலை
13. திருவருட்பா தேன்
14. அகர உகர மாலை - 6 நூற்கள்
15. ஞானமணி மாலை - 4 நூற்கள்
16. திருவாசக மணிமாலை
17. பரம பதம்
18. ஆன்மநேய ஒருமைப்பாடு
19. Who is Philanthropist Vallalar
20. Spiritual Education for Deathlessness
21. ஞானம் பெற விழி
22. ஜீவகாருண்யம்
23. மூவர் உணர்ந்த முக்கண்
24. Sanathana Dharma
25. உலககுரு வள்ளலார்
26. WORLD GURU VALLALAR

## ஞானசற்குரு சிவசெல்வராஜ் அவர்களுக்கு
# "ஆன்மீகச் செம்மல் விருது"

உலகில் இதுவரை பரிபாசையாகவும், இரகசியமாகவும் சொல்லி வந்த மெய்ஞ்ஞான விசயங்களை கன்னியாகுமரி ஞானசற்குரு சிவசெல்வராஜ் அவர்கள் பரசியமாக்கி, உலகர் அனைவரும் இறைவனை அடைய வழிகாட்டி அருள்பாலிக்கும் ஞான அருள் வள்ளல்! திருமந்திரம், திருவாசகம், திருஅருட்பா, கண்மணி மாலை, சாகாக்கல்வி என 34 மெய்ஞ்ஞான விளக்க நூற்களை ஞான தீட்சையில் பெற்று வெளியிட்டு ஆன்மீக ஞானத்தை பரப்பி வரும் அவர் பணிகளை கண்டு மனம்நெகிழ்ந்து, "ஆன்மீகச்செம்மல்" விருது வழங்கி பாராட்டி சிறப்பிக்கிறோம்.

**செந்தமிழ் அருள்நெறி பேரவை**
சுசீந்திரம்



# குரு பூஜை கொண்டாடு!

உலக குரு திருவருட்பிரகாச வள்ளலார் இராமலிங்க சுவாமிகள் சுபானுவருடம் புரட்டாசி மாசம் சித்திரை நட்சத்திரத்தன்று ஞாயிற்றுக்கிழமை (05-10-1823) பிறந்தார்! உலகுக்கு வழி காட்ட! ஒளி நெறி ஊட்ட! நம்மை கடைத்தேற்றுவதற்கு!?

இதுவரை இவ்வுலகில் எண்ணில்லா ஞானிகள் மகான்கள் சித்தர்கள் ரிஷிகள் யோகிகள் தவசீலர்கள் தோன்றி உலகருக்கு ஞான வழி காட்டியுள்ளனர்! எந்த நாட்டில் தோன்றிய யாராயினும் மனிதகுலம் உய்ய அன்பு ஒன்றை தவிர வேறு எதுவும் கூறவில்லையே!?

வாழையடி வாழையென வந்த அத்திருக்கூட்ட மரபில் வந்துதித்த ஞானி நம் வள்ளல் பெருமான்! வள்ளலாரிடம் உள்ள சிறப்பு யாதெனில், இதுவரை இரகசியமாக இருந்த ஞானத்தை, பலரும் பரிபாஷையாக மறைத்து சொல்லியதை எல்லோருக்கும் சொன்னார் வள்ளலார்!

உலக மக்கள் மரணமிலா பெருவாழ்வு பெற கூவி அழைத்த "வள்ளலாரே உலக குரு!"

உண்மை உணர்ந்து வள்ளலாரை நம் குருவென ஏற்று, அவர் அவதார தினத்தை குருபூஜையாக உலகெங்கும் கொண்டாடுவோம்!

மாதா பிதா பெற்ற நீவிர் குருவாக வள்ளலாரை கொண்டாடுக! குருபூஜைசெய்! குருவை போற்று! ஞானம் கிட்டும்!! மறவாதீர்! புரட்டாசி மாதம் சித்திரை நட்சத்தரத்தன்று குருபூஜை!! உலக குருவின் ஜெயந்தி!!

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி ஞானதானம் செய்க!!
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி ஞானதவம் செய்க!



இறைவன் திருவடிகளே நம்கண்கள்!
எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க!



வலது கண்
சூரியன்
சிவம்
அ
8

இடது கண்
சந்திரன்
சக்தி
உ
2

# தங்கஜோதி ஞானசபை
# அறக்கட்டளை

**வடலூர் - கன்னியாகுமரி - ஒசூர் - சென்னை - பெங்களூர்**

**பதிவு எண் : 48/2013**

நிரந்தர தலைவர் : திருவருட்பிரகாச வள்ளலார் இராமலிங்க சுவாமிகள்

நிறுவனர் : ஆன்மீகசெம்மல் ஞானசற்குரு சிவசெல்வராஜ்

| | | | |
|---|---|---|---|
| நிர்வாக தலைவர் | : Er. நகுலன் | - | நெய்வேலி |
| செயல்தலைவர் | : அரவிந்த்ராஜ் | - | ஒசூர் |
| செயலாளர்கள் | : விமல்ராஜ் | - | சென்னை |
| பொருளாளர்கள் | : லோகநாதன் | - | ஒசூர் |
| அறங்காவலர்கள் | : Dr. அருள்மொழி | - | நெய்வேலி |
| | இராதாகிருஷ்ணன் | - | நெய்வேலி |
| | A. விஜயன் | - | கும்பகோணம் |
| | ராஜேஷ் | - | ஒசூர் |
| | S. தங்கம் | - | கன்னியாகுமரி |
| | S.S. சுயம் ஜோதி | - | கன்னியாகுமரி |
| | N. பாலு | - | கோவை |
| சட்ட ஆலோசகர் | : ஜெயந்தி M.A., B.L. | - | ஒசூர் |

# தங்கஜோதி ஞானசபை அறக்கட்டளை செய்து வரும் ஞானதானம்!

தமிழகத்திலுள்ள பொது நூலகங்கள் அனைத்திற்கும் தங்கஜோதி ஞானசபை அறக்கட்டளையின் சார்பில் ஆன்மீக செம்மல் ஞானசற்குரு சிவசெல்வராஜ் எழுதி வெளியிட்ட அனைத்து நூற்களும் தானமாக கொடுத்து வருகிறோம்! நீங்களும் ஞானதானம் செய்க!'

1. வேலூர் மாவட்ட நூலகங்கள் - 120
   ஞானதானம் செய்த நல்லன்பர் ஜோதி. லோகநாதன், வேலூர்.
2. கடலூர் மாவட்ட நூலகங்கள் - 50
   ஞானதானம் செய்த நல்லன்பர் ஜோதி. சங்கர், சிங்கப்பூர்.
3. சென்னை மாவட்ட நூலகங்கள் - 137
   ஞானதானம் செய்த நல்லன்பர் ஜோதி. பாலு, பெங்களூர்.
4. செங்கல்பட்டு காஞ்சிபுரம் நூலகங்கள் - 125
   ஞானதானம் செய்த நல்லன்பர் ஜோதி. நகுலன், அருள்மொழி, நெய்வேலி.
5. திருவள்ளூர் மாவட்ட நூலகங்கள் - 120
   ஞானதானம் செய்த நல்லன்பர் ஜோதி. சிவா - விஜயன், கும்பகோணம்.
6. கன்னியாகுமரி மாவட்ட நூலகங்கள் - 120
   ஞானதானம் செய்த நல்லன்பர் ஜோதி. தங்கம் சுயம்ஜோதி, கன்னியாகுமரி.
7. தமிழ்நாடு கல்லூரி நூலகங்கள் - 108
   ஞானதானம் செய்த நல்லன்பர் ஜோதி. பிரகாஷ், பெங்களூர்.
8. நெல்லை மாவட்ட நூலகங்கள் - 188
   ஞானதானம் செய்த நல்லன்பர் ஜோதி. அரவிந்த், ஒசூர்.
9. திருச்சி மாவட்ட நூலகங்கள் - 130
   ஞானதானம் செய்த நல்லன்பர் ஜோதி. சரவணன், திருச்சி.
10. விழுப்புரம் மாவட்ட நூலகங்கள் - 130
    ஞானதானம் செய்த நல்லன்பர் ஜோதி. விமல், கடலூர்.

உலகில் இதுவரை மறைக்கப்பட்ட ஞான இரகசியங்களை பரிபாஷை விளக்கங்களை புத்தக வடிவில் உலகுக்கு வழங்கி ஞான சேவை புரியும் ஆன்மீக செம்மல் ஞானசற்குரு சிவசெல்வராஜ் அவர்கள், தம்மை நாடிவரும் யாராயினும் அவர்களுக்கு மெய்ஞ்ஞான உபதேசமும் திருவடி தீட்சையும் வழங்கியும் ஞானதானமும் செய்து வருகிறார்கள்! வருக! பெறுக மெய்ப்பொருள் உபதேசம் தீட்சை!!

ஞானதானம் செய்! ஞானதவம் செய்!

எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க!

# தங்கஜோதி ஞானசபை அறக்கட்டளை

**வடலூர் - கன்னியாகுமரி - ஓசூர் - சென்னை - பெங்களூர்**

## பணிவுரை

ஆன்மநேய ஒருமைப்பாடுடையீர்,

வந்தனம்! நன்றி! நலம்! நலமே நிலவுக! ஜீவ காருண்ய சீலர்களே, உலகெங்கும் பற்பல ஞானிகள் தோன்றி கடவுள் ஒருவரே என்றும் அவரை அன்பு ஒன்றினாலே தான் அடைய முடியும் என்றும் தெளிவாக கூறியிருக்கிறார்கள்!

ஆனாலும் பின்பற்றும் அறியாமை கொண்ட மனிதர்கள் மதம் சமயம் மார்க்கம் என்று பிரித்துவிட்டனர்! இதுவே துரதிருஷ்டம்! உலகுக்கு வந்த கேடு!

எந்த மகான் மதத்தை ஆரம்பித்தார் எந்த மகான் ஜாதியை போற்றினார்? அன்பால் உலகை ஒன்றுபடுத்த வந்த ஞானிகளை முட்டாள் உலகத்தவர் எப்படி மதித்தனர் தெரியுமா? சிலுவையில் அறைந்தனர்! கல்லால் அடித்து துரத்தினர்! விஷம் கொடுத்தனர்! துப்பாக்கியால் சுட்டனர்! மிகவும் கொடுமைபடுத்தினர்!!

ஆனாலும் ஞானிகள் விரோதிக்கும் கருணை காட்டினர்! துரோகிக்கும் ஞானம் ஊட்டினர்! பாவிக்கும் பரிவு காட்டினர்! ஜாதி மத இன வேறெந்த பேதமும் பார்க்காமல் எல்லோரையும் இறைவனின் பிள்ளைகளாகவே, தன் சகோதர சகோதரிகளாகவே தான் பார்த்தனர்! இதுதான் ஞானியின் இயல்பு!

இப்படிப்பட்ட ஞானிகள் சித்தர்கள் நம் பாரத புண்ணிய பூமியில் ஏராளம்! ஏராளம்!! குறிப்பாக தமிழ்நாட்டிலோ, தடுக்கிவிழுந்தால் ஒரு சமாதி மேல் தான் விழ வேண்டும்!! அவ்வளவு சமாதிகள் ஞான ஆலயங்கள் பெருகி கிடக்கின்றன!

பல்ஆயிரம் கோயில்கள் பல்லாயிரம் ஞானிகள் சமாதி பீடங்கள் இருந்தும், கொலை முதலிய பஞ்சமா பாதகங்கள் புரிபவராக மக்கள் திகழ்கிறார்களே ஏன்?! வேதபுராண இதிகாசங்கள் ஞான நூற்கள் ஏராளம் இருந்தும் மக்கள் ஜாதி மதம் எனக் கூறிக்கொண்டு அஞ்ஞானிகளாய் திரிகிறார்களே ஏன்?!

இவையெல்லாம் இருக்கிறது என எடுத்துச்சொல்ல ஆளில்லை! இதுதான் ஞானம் என வழிகாட்ட ஒருவருமில்லை! 5000 வருடமாயிற்று புத்தர் தோன்றி! இந்தியாவில் புத்தமதம் அவ்வளவாக இல்லை?! புத்தர் பிறந்த இந்தியாவிலேயே அதற்கும் முன்னதாக உயர்ந்த ஞானம் விளங்கிவந்தது தான் காரணம்!

2000 வருடமுன்பு தோன்றிய இயேசு சொன்னதைவிட, 1400 வருடமுன்பு தோன்றிய முகமது நபி போதித்ததை விட, இன்னபிற மதங்களைவிட உன்னதமான ஒருநெறி நம் இந்தியாவில் இருக்கின்றது!! இன்றும் உலகை வழிநடத்தும் அந்த ஒப்பில்லாத, மனிதன் மனிதனாக வாழ வழி காட்டும் வாழ்க்கை முறையே "சநாதனதர்மம்" என்பதாகும்!!

வரலாறு கண்டறியா காலத்துக்கு முன்பே துலங்கி நிற்பதே சநாதனதர்மம்! இது இந்து மதமல்ல! மதமே அல்ல! மனிதன் மனிதனாக வாழ நம் முன்னோர்கள் ஏற்படுத்திய வாழ்க்கை முறை!! நான்கு வேதங்களிலும் பதினெண்புராணங்களிலும் இதிகாசத்திலும் உபநிஷத்திலும் அகத்தியர் முதலான சித்தர் பெருமக்களும் சாத்திர தோத்திர நூற்கள் எதிலும் நாயன்மார்களும் ஆழ்வார்களும் யாருமே எங்குமே இந்து மதம் என்று சொல்லவேயில்லை?! நாமும் சிறிதுகால முன்புவரை இந்துமதம் என்று சொன்னதில்லை?

வெளிநாட்டிலிருந்து வந்த பிற மதத்தவர்கள் இந்தியர்களை அகண்ட பாரத தேசத்திலுள்ளவர்களை இந்துக்கள் இந்துமதத்தை சேர்ந்தவர்கள் என நமக்கு பெயர் சூட்டிவிட்டனர்! அறியாமையில் இருந்த நம்மவர்களும் ஆமாம் ஆமாம் நாங்கள் இந்துக்கள் என புலம்புகின்றனர்!!

இந்தியர்களே, உலகத்துக்கே ஞானத்தை கற்பித்தது, மனிதன் மனிதனாக வாழும் நெறியை போதிக்கும் சநாதன தர்மமே இங்கே விளங்குவது! ஜாதி மத இனமொழி முதலான எந்த பேதமுமின்றி கடவுள் ஒருவரே! உலகமக்கள் அனைவரும் அவர் பிள்ளைகளே என்றுரைப்பதே சநாதனதர்மம்! இது மதமல்ல! இந்துமதம் அல்ல! பிரித்து பார்ப்பது அறிவுடைமை ஆகாது! யாதும் ஊரே! யாவரும் கேளீர்! இதுவே நம் சநாதன தர்மம்! உயர்ந்த பரந்த மனப்பாங்குடன் வாழ வழிகாட்டும் ஒழுக்க நெறி!

இதைத்தான் ஒவ்வொருஞானியும் கூறினர்! உணராதவர்கள் உளறலை கேட்டுத்தான் உலகெங்கும் பிரிவினை உண்டானது! இன்றைய உலகம் அழிவை நோக்கி போகக் காரணம், மத ஜாதி மொழிநாடு என்ற பிரிவினை வாதிகள் செயல்தான்!! உலகம் சுபிட்சம் அடைய வேண்டுமெனில் இந்த பிரிவினைகள் அகல வேண்டும்!

சிகாகோ மாநாட்டில் சுவாமி விவேகானந்தர் சொன்னாரே, “சகோதர சகோதரிகளே” என்று!! இந்தியர்கள், இந்தியாவில் பிறந்தவர்கள் இதை புரிந்துகொண்டால் போதும்! உலக மக்களை படைத்த இறைவன் ஒருவனே! அப்படியானால் நாமனைவரும் சகோதர சகோதரிகள் தானே?! பகைமை, விரோதம், வஞ்சம், பொறாமை, கோபம் இந்த துர்க்குணங்கள் இல்லாதவனே மனிதன்!! தூய நல்லொழுக்க நெறிநின்று பரந்த மனப்பான்மையுடன் எல்லோரிடமும் அன்பு பாராட்டி வாழ்பவனே மனிதன்! இதைசொல்வதுதான் சநாதன தர்மம்!!

இப்படிப்பட்ட மிகமிக உயர்ந்த உன்னதமான ஒப்பற்ற சநாதன தர்மத்தையே நம் வள்ளல் பெருமான் “சன்மார்க்கம்” என்றார்! ஜாதி மத இன மொழி வேறுபாடற்ற சமத்துவ சமுதாயம் காண சன்மார்க்க சங்கம் சார்வீர்! என உலகோரை அழைக்கின்றார்!

சன்மார்க்கமே உலகை காக்கும்! இதைப்பற்றி தெளிவாக எடுத்தியம்புகிறார் வள்ளல் பெருமான்! நம் வாழ்க்கைக்கு அஸ்திவாரம் ஒழுக்கம்! தூய சைவ உணவு! எவ்வுயிரும் தம்முயிர்போல் எண்ணும் தூய மனம்! பக்தி! இதையெல்லாம் உபதேசித்து வழி காட்ட வேண்டும் ஒரு ஞான சற்குரு! குருதான் உண்மை ஞானம் உரைப்பார்!

ஒளிவு மறைவின்றி ஞானம் உலகருக்கு எடுத்தியம்பியதால் இராமலிங்கம் திருவருட்பிரகாச வள்ளலார் ஆனார்! அருள் வள்ளல் ஆனார்! அந்த மகானுபாவர் வாழ்வை நாம் அறிய, குரு மகத்துவம் அறியவே இந்நூல்! வள்ளலார் வாழ்க்கை வரலாற்றை அடியேன் சொல்ல முனைகிறேன்!

வள்ளலார் வரலாற்றை எழுதிநூலாக வெளியிடுவதை நான் பெற்ற பெரும் பேறாக கருதுகிறேன்! குருவே பரம்பிரம்ம சொரூபம் ஆதலால் உலகுக்கே குருவான இராமலிங்கர் வாழ்வை அறிந்தால், அவர்

உபதேசங்களை உணர்ந்தால் மனிதன் உண்மையிலேயே மனிதனாவான் சந்தேகமேயில்லை!!

பரோபகாரசிந்தனை உள்ள மகான் ஸ்ரீஇராமானுஜருக்கு உலககுரு வள்ளலார் நூலை காணிக்கையாக சமர்ப்பிப்பதில் அடியேன் பெரு மகிழ்ச்சியடைகிறேன். அன்பைப் போதித்த அனைவருக்கும் இந்நூல் சமர்ப்பணம்! அறிவை போதித்த அனைவருக்கும் இந்நூல்சமர்ப்பணம்!

திருவருட்பிரகாச வள்ளலார் இராமலிங்க சுவாமிகள் வரலாற்றை விளக்கமாக தெளிவாக அழகாக வெளியிட்டிருக்கிறார் சன்மார்க்கதேசிகன் ஊரன் அடிகளார்! வடலூர் வள்ளலார் பெயர் சொல்லும் ஒவ்வொருவரும் போற்றி பாதுகாக்க வேண்டிய பொக்கிஷம் அது! வள்ளல் பெருமான் அடியவர்கள் அனைவரும் முதலில் ஊரன் அடிகளாருக்கு நன்றி சொல்லியே ஆக வேண்டும்!

வள்ளலார் வரலாறு மேலும் பலரால் எழுதி வெளியிடப்பட்டுள்ளது. அந்த கூட்டத்தில் நானும் சேர வேண்டுமென்ற தீராத ஆசை எனக்கு! எழுதிவிட்டேன் "உலககுரு வள்ளலார்" எனும் இந்நூலை வள்ளல் பெருமான் ஆசியோடு!!

இந்நூல் அடியேன் எழுதி வெளியிடும் 40வது நூல்! 1992-ல் "கண்மணி மாலை" எழுதத் தூண்டிய வள்ளல் பெருமான் தொடர்ந்து அருள் மழைபொழிவதால் அடியேனால் 40 நூற்களை எழுதி வெளியிட முடிந்தது!!

1980-ல் மறுபிறவி எடுத்த அடியேனை இரு பன்னிரண்டாண்டில் குரு பீடமமர்த்தி அழகு பார்த்தார் வள்ளல்பெருமான்! கடந்த ஒன்பது ஆண்டுகளில் பலநூறு பேர்களுக்கு உண்மை ஞானத்தை இரகசியம் ஏதுமின்றி உபதேசம் தீட்சை வாயிலாக விழிவழியே உணர்த்தி காட்டிடவும் வள்ளல் பெருமானே அருளினார்!

மூன்றாம் பன்னிரண்டாண்டில் தங்கஜோதி ஞானசபை அறக்கட்டளை உருவாகிறது! வடலூரில் அறக்கட்டளைக்கு இடம் தானமாக தருகிறார் எமது அன்பு சீடர் நெய்வேலி இராதாகீதா தம்பதியினர்! கட்டித்தர குருவின் தலைமையில் சீடர்கள் தயாராகிவிட்டனர்! தங்கஜோதி ஞான சபை அறக்கட்டளைக்கு அடியேனின் 40 நூற்களையும் தானமாக வழங்கி விட்டேன் பெரு மகிழ்வுடன்!

இப்போது WWW.வள்ளல்யார்.com என்ற இணையதளம் மூலம் உலக முழுவதும் இந்த சநாதன தர்மத்தை- சன்மார்க்கத்தை - ஞான இரகசியத்தை எல்லோரும் அறிய வெளியிட்டுள்ளோம்! இன்றைய உலகில் மெய்ஞ்ஞானத்தை இரகசியம் ஏதுமின்றி தெளிவாக உபதேசம் தீட்சை மூலம் அடியேன் மட்டுமே வள்ளல் பெருமான் அருளால் வழங்குகிறேன்! எல்லோரும் வரலாம்! பெறலாம் ஆத்மஞானம்!

தங்கஜோதி ஞானசபை அறக்கட்டளை ஆரம்பமாகிவிட்டது! இனி பொற்காலம் தான்! இனி வருங்காலம் சித்தர்கள் காலம்! இந்திய ஞான பூமி உலகை வழிநடத்தும்! வள்ளலார் அருள்வார்!!

எமது சீடர்களே ஞானதானம் செய்கின்றனர்! எல்லா புண்ணியமும் அவர்களுக்கே! தங்கஜோதி ஞானசபையை நடத்தும் தங்கமான சீடர்கள்! எமது சீடர்கள் தரும் காணிக்கையில் தான் நான் குடும்பத்துடன் வாழ்கிறேன்! ஞான தானமும் செய்கிறேன்!

திருவருட்பிரகாச வள்ளலார் இராமலிங்க சுவாமிகள் அவர்களின் 191-வது திரு அவதார தினமான புரட்டாசி சித்திரையன்று 06-10-2013-ல் குருபூஜை, சீடர்களோடு கன்னியாகுமரி தங்கஜோதி ஞானசபையில் கொண்டாடி மகிழும் இத்தருணத்தில் புனிதமான இந்த "உலககுரு வள்ளலார்" நூலை வெளியிடுகிறோம்! அனைவரும் ஆன்மலாபம் அடைக!

"உலக குரு வள்ளலார்" எனும் இந்நூலில் திருவருட்பிரகாச வள்ளலார் இராமலிங்க சுவாமிகள் அவர்களின் வரலாற்றை சொல்வதைவிட உலகுக்கு அவர் வழங்கிய அருள்கொடையைப் பற்றி கூறுவதே பொருத்தமாக இருக்கும் என கருதுகிறேன்!

உலக மக்கள் அனைவரும் மரணமிலா பெருவாழ்வு பெறலாம் என்று அழைத்து, அதை விளக்க "சத்திய ஞானசபை" உருவாக்கி, சூட்சம நிலையிலிருந்து இன்றும் ஞானதீட்சை வழங்கி உடனிருந்து வழிநடத்துகிறார்!! இதையெல்லாம் உலகுக்கு தெரிவிக்கவே இந்நூல்!

என்றும் உண்மையுள்ள
**சிவசெல்வராஜ்**

## வள்ளல் பெருமானின் அருளிச் செயல்கள்

1. பாடல்கள் : திருஅருட்பா - ஆறு திருமுறைகள்

2. பாடல்கள் : ஆறுதிருமுறைகளிலும் சேராதது

3. விண்ணப்பங்கள் : இறைவனிடத்துச் செய்து கொண்டவை (உரைநடை)

4. கடிதங்கள் : தம் கைப்பட எழுதியவை

5. கட்டளைகள் : தாம் நிறுவிய நிலையங்களின் நடைமுறைகள் பற்றி எழுதியவை

6. பத்திரிகைகள் : சுற்றறிக்கைகளும், அழைப்பிதழ்களும்

7. உபதேசங்கள் : கூட இருந்தவர்களும், கேட்டவர்களாலும் எழுதி வைக்கப்பட்டுள்ள குறிப்புகள்

8. உரைநடைநூல்கள் :
   1. மனுமுறை கண்ட வாசகம்
   2. ஜீவகாருண்ய ஒழுக்கம்

9. உரைகள் :
   1. தமிழ் என்ற சொல்லுக்கு எழுதிய உரை
   2. பெரியபுராணம் முதல் பாடல் முதல் சொல் 'உலகெலாம்' என்பதற்கு வரைந்த விளக்கம்
   3. ஒழிவிலொடுக்கப் பாயிரவிருத்தி
   4. தொண்ட மண்டல சதகத்தின் நூற்பெயர் இலக்கணமும் கடவுள் வாழ்த்து பாடலுக்கு செய்த உரையும்
   5. பொன்வண்ணத் தந்தாதியின் 22-ஆம் பாடலுக்கு செய்த உரை
   6. வேதாந்த தேசிகரின் குறட்பா ஒன்றுக்கு வரைந்த உரை

10. பதிப்பித்த நூற்கள் :
    1. ஒழிவிலொடுக்கம் - 1851
    2. தொண்ட மண்டல சதகம் - 1855
    3. சின்மய தீபிகை - 1857

11. பிற : பிறரது நூல்களுக்கும் பதிப்புகளுக்கும் வழங்கிய சாற்றுக்கவிகள் மருந்துச் சரக்குகளின் குண அட்டவணை

## வள்ளல் பெருமானின் தனிப்பெரும் அருட்பணிகள்

1. சமுதாயத்திலும் மதத்திலும் வேறூன்றிவிட்ட கண்மூடிப் பழக்கமெல்லாம் மண்மூடிப்போக அரும்பாடு பட்டார்கள்.

2. முதல்முதலாகத் திருக்குறள் வகுப்பு நடத்தினார்கள்.

3. முதன்முதலில் முதியோர் கல்வியை ஏற்படுத்தினார்கள்.

4. முதன்முதலில் தமிழ் ஆங்கிலம் இந்தி என மும்மொழி பாட சாலையை உருவாக்கினார்கள்.

5. தமது கொள்கைக்கென்று தனி ஒரு மார்க்கம் கண்டார். "சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்".

6. தமது மார்க்கத்திற்கென்று தனிக்கொடி கண்டார். "சன்மார்க்க கொடி" மேல் ஒருபகுதி மஞ்சள் கீழ் இருபகுதி வெள்ளை.

7. தமிழ்நாட்டின் முதல் கல்வெட்டு ஆராய்ச்சியாளர்.


8. எவ்விதபேதமின்றி அனைவருக்கும் அன்னதானம் வழங்கிட "சமரச சுத்த சன்மார்க்க சத்திய தருமச்சாலை" ஏற்படுத்தினார்.

9. சடங்குகள் ஏதுமின்றி இறைவனை ஜோதி வடிவில் வழிபட சமரச சுத்த சன்மார்க்க சத்திய ஞானசபை நிறுவினார்.

10. வள்ளலார் கண்ட ஆன்மநேய ஒருமைப்பாட்டு நெறிக்கு மேல் ஒரு நெறி இல்லை.

11. "அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
    தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி"
    என்று வள்ளல்பெருமானார் அருளிய மகாகமந்திரத்திற்கு மேலான மந்திரம் ஒன்றும் இல்லை.

12. சன்மார்க்க நெறியை உரைத்ததோடு அல்லாமல் அதன்படி வாழ்ந்துகாட்டினார்கள். அதன் பயனாக அருட்பெருஞ்ஜோதி ஆனவர் நம் வள்ளல் பெருமான் ஆவார்.



வடலூர் தருமச்சாலையில்
சாப்பிட்டு விட்டு
**"பசித்திரு"**



சத்திய ஞானசபையில் ஜோதி
தரிசனம் பார்த்து விட்டு
**"தனித்திரு"**



தங்க ஜோதி ஞானசபையில்
உன்னுள் ஜோதி காண சும்மா இரு
**"விழித்திரு"**

சன்மார்க்க சங்கத்தின் குறிக்கோள் "ஆன்மநேய ஒருமைப்பாடு"

சத்திய தருமச்சாலையின் குறிக்கோள் "ஜீவ காருண்ய ஒழுக்கம்"

சத்திய ஞான சபையின் குறிக்கோள் "ஜோதி தரிசனம்"

சித்திவளாகத்தின் குறிக்கோள் "மரணமிலா பெருவாழ்வு"

திருவருட்பாவை உணர்ந்தால் "எல்லாம்" கிட்டும்!!

# உலக குரு வள்ளலார்

இந்திய ஞானபூமியிலே யுகம் யுகமாக அருளாளர்கள் ஞானிகள் ரிஷிகள் மகான்கள் தோன்றி மக்களுக்கு வாழும் நெறியை உபதேசித்து, முடிவில் மனித பிறவியின் இலட்சியமான இறைவனோடு ஐக்கியமாகும் வழியையும் காட்டி, விழியிலே விளங்கும் விமலனை உணர்த்தியும் சென்றனர்!

எங்கு சென்றனர்? எங்கிருந்து வந்தோமோ அங்கே! செல்வதற்கு முன் பலர்தான் பெற்ற அனுபவத்தை புராணம் கதை என ஏடுகளில் எழுதி பிற்கால சந்ததிகள் அறியட்டுமே உணரட்டுமே என விட்டுச் சென்றனர்! ஒழுக்கம் பண்பு நீதிநெறி சத்தியம் அஹிம்சை அன்பு ஒவ்வொரு மனிதனுக்கும் இருக்க வேண்டிய அவசியத்தை வலியுறுத்தினர்! மனிதன் மனிதனாக வாழ வழி காட்டினர்!

இன்று வரை இவ்வுலகில் தோன்றிய அருளாளர்கள் அனைவரும் சொன்ன கருத்து இதுதான்! கடவுள் ஒருவரே! அவர் உருவமும் அருவமும் இல்லா அருஉருவான ஒளியே! பேரொளியே! பிரபஞ்சமெங்கும் ஒவ்வொரு அணுவுக்கும் அணுவாயிருக்கும் ஒளியே! எங்கும் நிறைந்தவன்! எல்லாம் வல்லவன்! எல்லாம் அவன் செயல் ஆதியும் அந்தமும் அவனே! கடவுள் இறைவன் பரம்பொருள் பரமாத்மா இன்னும் பலவிதமாக போற்றப்படுகிறான் அந்த ஒரே கடவுளே!

எல்லாமுமான அந்த இறைவனே பஞ்ச பூதங்களாக, நிலம் நீர் நெருப்பு காற்று ஆகாயம் என விளங்குகிறான்! சர்வமும் இதுவாகவே உள்ளது! எல்லாமே பஞ்சபூத கூட்டுறவேயாகும் பஞ்சபூதத்திலும் பஞ்ச பூதமுண்டு! இதுவே அதிசயம்! ஒன்றுக்குள் ஒன்று அடக்கம்!

மனிதனும் பஞ்ச பூதத்தால் உருவானவனே! உடல் மண் அம்சம், இரத்தம் நீர் அம்சம், உயிர் நெருப்பம்சம், வாயுஅம்சம், சுவாசம் உடலுக்குள் ஆகாய வெளியிலே இவையனைத்தும்! உடல் எனும் கூட்டை உருவாக்கிய அந்த மாயக் குயவனார், இறைவன் எவ்வளவு தேர்ந்த திறமை சாலி?! சற்று சிந்தியுங்கள்!

நம்உடல் நாம் விரும்பிய படியா வந்தது? நாம் எப்படி பிறந்தோம்? ஏன் பிறந்தோம்? எங்கிருந்து பிறந்தோம்? நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்வது எப்படி? எப்படி வாழ்கிறோம்? எதற்காக வாழ்கிறோம்? பலரும் இவையொன்றும் தெரியாமலே இறந்தும் போகின்றனர்!?

மற்றவர் சொன்னதை கேட்டு, பார்த்து கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்று வெந்ததை தின்று வந்ததை கொண்டு மனம் போன போக்கிலே வாழத் தெரியாமல் வீழ்ந்து மடிகிறார்கள்?! இது தான் வாழ்க்கை என கருதி மிருகம் போல் மனிதன் வாழ்கிறான்!? ஐயோ! பாவம்!

அஞ்ஞானத்தில் உழலும், சம்சார சாகரத்தில் சிக்கிதவிக்கும் மாக்களை மீட்க, காக்கும் பொருட்டு மெய்ஞ்ஞானிகள் உண்மை ஞானத்தை மனிதன் மனிதனாக வாழும் வாழ்க்கை நெறியை உலகுக்கு உணர்த்திச் சென்றனர்! ஒருவர் இருவர் அல்ல! எண்ணிலடங்கா மெய்ஞ்ஞானிகள் நமது இந்திய ஞானபூமியிலே உண்டு!

முற்பிறவிகளின் கர்மவினைபயனே இப்பிறப்புக்கு காரணம்!? இதுவே முதல் இரகசியம்!! யாரோ, நம் அனைவருடைய வினைகணக்கையும் வைத்திருக்கிறாரே?! யாரோ, நம்மை குறிப்பிட்ட தாய் தந்தைக்கு, குறிப்பிட்ட ஊரில், குறிப்பிட்ட நேரத்தில் பிறப்பிக்க வைக்கிறாரே?!

நம்மை பிறக்கச் செய்த அவரே உடல்தந்தார், பாலினம் தந்தார், உயிராகவும் இருந்து வளர்க்கிறார், வினைக்கு தக்கபடி ஆட்டியும் வைக்கிறார்!? மனம் புத்தி சித்தம் அகங்காரம் என்று அந்தகரணங்கள் நான்கையும் தந்து வாழவும் விடுகிறார்! ஏனிந்த விளையாட்டு? நாடகம்?

நான் யார்? நான் காண்பவையெல்லாம் என்ன? மாயையா? நான் கேட்பவையெல்லாம் சரியா தவறா? கண்டதும் கேட்டதும் பொய்யா? எதுமெய்? எனக்கு இதெல்லாம் யார் உரைப்பார்? யாரை நாடி என்ன தெரிந்து கொள்வது?

இதுபோன்ற எல்லா கேள்விகளுக்கும் வாழ்க்கை பாடத்துக்கும் பதிலளிக்கிறார்கள் நம் நாட்டு மெய்ஞ்ஞானிகள்! ஏ மனிதா! நீ மனித உருகொண்டிருக்கிறாயே உண்மையிலேயே மனிதனாக வாழ்கிறாயா? உன்னைப் பற்றி நீயே சிந்தித்துப்பார்! உன்னிடமுள்ள நல்லவை கெட்டவைகளை எண்ணிப் பார்த்து தீயவைகளை விட்டு, நல்லவனாக மாறிவிடு!

அதற்கு வேத புராண இதிகாச உபநிஷத மட்டுமன்றி எண்ணில்லா சித்தர் ஞானிகளின் உபதேச நூற்களும் நமக்கு வழிகாட்டுகின்றன! ஏதாவது ஒன்றை படித்து புரிந்து கொண்டாலே போதும் ஒருவன் நல்லாவதற்கு! இப்படியெல்லாம் இருக்கிறது என ஒவ்வொரு பெற்றோரும் தங்கள் பிள்ளைகளுக்கு எடுத்துரைக்க வேண்டும்!? இது பெற்றோர்களின் கடமை!

பொருள் சம்பாதிக்க தூண்டும் பெற்றோர், ஏதோ தான் தாம் பெற்றோம் என கருதி பிள்ளைகளை தாங்கள் விரும்புகிறபடி படிக்க வேலைபார்க்க மணமுடிக்க வாழவும் வற்புறுத்துகிறார்கள்! அறியாத போது கேட்ட பிள்ளை சற்று உலகை பார்த்தறிந்ததும் பெற்றோரை மதிப்பதில்லை! தன் சுதந்திரத்தில் தலையிடுவதாக கோபப்படுகிறார்கள்?! ஐந்தில் வளையாதது பின் வாழ்க்கையில் ஏற்படும் அடி, துன்பத்தில் தான் மாறுவான்! இதற்கெல்லாம் காரணம் பெற்றவர்கள் பிள்ளைகளை ஒழுங்காக வளர்க்காததுதான்!

மாதா பிதாவை காட்டுகிறாள்! பிள்ளை எவராது பிதாவை அறியுமா? மாதா சொல்கிறாள் நம்புகிறோம்! நல்ல அப்பனாக இருந்தால் பிள்ளைகளுக்கு ஒழுக்கத்தை, பக்தியை, நன்னெறியை சொல்லிக்கொடுக்க வேண்டும்!? பணத்தை சம்பாதிக்க நாயாய் பேயாய் அலையும் மனிதன் நல்ல குணவானாக வாழ முயற்சிக்க வேண்டாமோ?! மாதாவுடன் அறுசுவைபோம்! பிதாவுடன் கல்விபோம்! தாய் பாலூட்டி சீராட்டி உணவளித்து பேணிகாப்பாள்! தந்தை நல்ல ஆசானிடம் கூட்டிப்போய் கல்வி கற்பிக்க வைத்து நல்ல மனிதனாக்க வேண்டும்!

பிதா, உலக கல்வி சாகாக் கல்வி கற்க நல்ல ஒரு குருவிடம் பிள்ளையை அனுப்பணும்! அவரே நல்ல தந்தை! அப்படி ஒரு நல்ல குருவை ஞானமும் கல்வியும் கற்றுத்தருகின்ற ஞான சற்குருவை பெற்றவனே முதலில் மனிதனாகிறான் பின் தேவனாகிறான் முடிவில் தெய்வமாகிறான்! புல்லாய் பூடாய் பறவையாய் பல்விருகமாய் கணங்களாய் எத்தனையோ பிறப்பு பிறந்து பிறந்து முடிவில் அரிதினும் அரிதான மானுட பிறவி எடுத்த நாம் இந்த உண்மைகளை உணர வேண்டாமா?

இதையெல்லாம் உள்ளதை உள்ளபடி சொல்லி நம்மையும் ஞானப்பதைக்கு இட்டுச்செல்பவரே குரு! உண்மைகுரு! மெய்குரு! ஞானசற்குரு! இந்திய ஞானபூமியிலே இதுபோன்ற ஞான குருமார்களுக்கு பஞ்சமேயில்லை?! கல்தோன்றி மண்தோன்றா காலத்தே முன்தோன்றிய மூத்ததமிழ் என்றால், இவ்வளவு காலம் என கணக்கிட்டு சொல்ல முடியாத காலத்துக்கும் முன்னர் மெய்ஞ்ஞானிகள் இங்கு உள்ளனரே!

அங்ஙனம் வாழையடி வாழையாக இந்த புண்ணிய பூமியில் இந்தியாவில் வந்துதித்து மக்களுக்கு நல்வழி காட்டியவர்கள் ஏராளம்! ஏராளம்! அந்த மெய்ஞ்ஞானிகள் வரிசையிலே பத்தொன்பதாம் நூற்றாண்டிலே இந்தியாவிலே ஞான ஆரண்யமான தமிழ் நாட்டில் உலகை ஞானப்பாதையில் இட்டுச் செல்ல வந்துதித்தவர் தான் திருவருட்பிரகாச வள்ளலார் இராமலிங்க சுவாமிகள் அவர்கள்!

இதுவரை தோன்றிய ஞானிகள் யாரும் குறிப்பிட்ட யாருக்காகவும் தோன்றவில்லை! உபதேசம் செய்யவில்லை! எல்லோரும் நன்றாக வாழவே வழி காட்டினார்கள்!! உலகமக்கள் அனைவரும் அன்பால் ஒன்றுபட்டு வாழவே அறிவுறுத்தினார்கள்!! உலக மக்கள் அனைவரும் போற்றும்படி வாழ்வாங்கு வாழ்ந்தார்கள்! ஆண்டுகள் பலசென்றபின்னும் மக்கள் மனதில் நிரந்தரமாக வாழ்கிறார்கள்! அவர்கள் தான் தெய்வக் குழந்தைகள்! அவர்களுக்கு ஜாதி மதம் இனம் மொழி நாடு போன்ற எந்த பாகுபாடும் கிடையாது!

ஞானிகள் எவ்வுயிரும் தம்முயிர் போல் எண்ணும் உத்தமர்கள்! அன்பே உருவானவர்கள்! இரக்கமே உயிராக கொண்டவர்கள்! கருணை ஒன்றே அவர்கள் செயலாகும்! “யாதும் ஊரே யாவரும் கேளிர்” என்ற உலக தத்துவமே அவர்கள் போதனையாம்! அன்பால் உலகை வென்றவர்கள்! வாடிய பயிரைக் கண்டும் வாடியவர்கள்! கடவுள் ஒருவரே! உலகிலுள்ள உயிர்கள் அனைத்தும் இறைவன் பிள்ளைகளே என்றனர்! அனைவரும் சகோதர சகோதரிகளே என்றே கூறினர்!

இவர்களிலிருந்து இன்னும் மேம்பட்டவராக, உலகமக்கள் சுபிட்சமாக வாழ்ந்தால் மட்டும் போதாது, மரணமிலா பெருவாழ்வும் பெற வேண்டும் என்றும் அதற்கான வழி விழி முறைகளை பற்றியும் எளிமையாக உபதேசித்த உத்தம ஞானியே திருவருட்பிரகாச வள்ளலார் இராமலிங்க சுவாமிகள் அவர்கள்!

கடவுள் ஒருவரே என்றும், அவர் ஒளியாகவே துலங்குகிறார் என்றும் எல்லோரும் சொன்ன அதே கருத்தைத் தான் நம் வள்ளல் பெருமானும் கூறினார்! கோவில் வழிபாடு எல்லாம் பக்தியால் மனிதன் பண்படவே! வேள்வி பூஜை முதலானவை உலக க்ஷேமத்துக்கான கிரியை நிலையே! பிராணாயாமம் முதலிய எல்லா சாதனைகளும் உடலையும் உள்ளத்தையும் பண்படுத்தும் யோகநெறியே! ஞானம் என்றால் நான் இறைவனால் படைக்கப்பட்ட ஜீவாத்மா என்பதை அறிந்து உணர்ந்து அம்மயமாதலே!

இதை தெளிவாக கூறி மனித பிறவியின் நோக்கமே ஞானம் பெறுவது தான் என பறை சாற்றிய ஒப்பில்லா ஞானி நம் திருவருட் பிரகாச வள்ளலார் இராமலிங்க சுவாமிகள் அவர்கள்! அன்னாரை பற்றி நாம் முழுமையாக அறிந்து கொண்டால் தானே அவர் காட்டிய வழியில் விழிவழியே நாமும் ஞானம்பெற முடியும்?! வள்ளல் பெருமானின் வாழ்க்கையே நமக்கு பாடம்! எண்ணில்லா ஞானிகளின் உபதேசத்தை எண்ணிப் பார்க்க வைத்துவிட்டார் இராமலிங்கர்!!

இராமலிங்கம் என்று பெற்றோரால் அழைக்கப்பட்ட வள்ளலார், தமிழ்நாட்டில் ஒப்பற்ற பஞ்சபூததலங்களில் ஆகாயத்தலமான சிதம்பரம் ஊருக்கு வடமேற்கே 20 கி.மீ. தொலைவில் உள்ள மருதூர் எனும் சிற்றூரில் பிறந்தார்! வடலூரிலிருந்து சிதம்பரம் சாலையில் 12 கி.மீ. தூரத்தில் உள்ளது மருதூர்.

இராமலிங்கத்தின் தந்தை இராமையாபிள்ளை. தாய் சின்னம்மையார். கிராம கணக்கு பிள்ளையான இராமையாபிள்ளை ஒன்றன் பின் ஒன்றாக ஐந்து மனைவியரும் இறக்கவே ஆறாவதாக திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரிக் கருகிலுள்ள சின்னகாவணத்தை சேர்ந்த சின்னம்மையை மணந்தார். இவர்களுக்கு சபாபதி பரசுராமன் எனும் ஆண்மக்கள் இருவரும் உண்ணாமுலை சுந்தரம் எனும் பெண்மக்கள் இருவரும் பிறந்தனர்.

இங்ஙனம் இருக்கையிலே ஒருநாள் இராமையாபிள்ளை வேலை விஷயமாக வெளியூர் சென்றார். அன்று மதியம் சிவனடியார் ஒருவர் இராமையாபிள்ளை வீட்டுவாசலில் நின்று "பிச்சாந்தேகி" என்றார். வீடு உள்ளே இருந்து வாசல் வந்த சின்னம்மையார் சிவனடியாரே கண்ணுற்று உள்ளே அழைத்து உபசரித்து அமரச்செய்து அறுசுவை உணவை படைத்தாள். அன்போடு உபசரித்து அமுது செய்வித்த சின்னம்மையை வாழ்த்திசிவனடியார், என் பசி நீக்கிய உனக்கு, உலகத்தோர் பசி நீக்கும் ஒரு அருந்தவச் செல்வன் மகனாக விரைவில் பிறப்பான் என்று ஆசி கூறி விபூதி பிரசாதம் கொடுத்து சென்றார்!

மாலை வீடு திரும்பிய கணவனிடம் சின்னம்மையார் நிகழ்ந்தவற்றை கூறி மகிழ்ந்தாள். அந்த சிவனே அடியார் வடிவிலே வந்தார் என கருதிய இராமையாபிள்ளை தான் அவரை தரிசிக்க முடியாமல் போய்விட்டதே என வருந்தினார். தன் மனைவிக்காவது அந்த பாக்கியம் கிடைத்ததே என்று மிகவும் மகிழ்ந்தார்.

சுபானுவருஷம் புரட்டாசி மாதம் 21-ம் தேதி சித்திரை நட்சத்திரத்தில் ஞாயிற்றுக்கிழமை மாலை 5.50 மணியளவில் 05-10-1823, இராமையா சின்னம்மை தம்பதியருக்கு ஐந்தாவது மகவாக இராமலிங்கம் பிறந்தார். அஞ்ஞான இருள் சூழ்ந்த உலகுக்கு ஞான ஒளிவிளக்கென இராமலிங்கம் இறையருளால் வந்து உதித்தார்!

இராமலிங்கருக்கு 5 மாதமான போது பெற்றோர், சிதம்பரம் நடராஜ பெருமானை தரிசனம் செய்விக்க போனார்கள். நடராஜ பெருமானை கண்டு வணங்கி பின், சிதம்பரஇரகசியம் தரிசனம் காணும்போது திரை நீக்கி தீபாராதனை அப்பைய தீக்ஷிதர் காண்பித்ததும் 5 மாத குழந்தை இராமலிங்கம் கலகலவென சிரித்தது!

தாயின் கையிலிருந்த குழந்தை சிரித்ததை கண்ணுற்ற தீக்ஷிதர் இறைவன் அருளால் பிறந்த ஞானக் குழந்தை எனக்கூறி மகிழ்ந்து அனைவரையும் தன் இல்லத்துக்கு அழைத்துப் போய் அமுது செய்வித்து அனுப்பினார். இராமலிங்கருக்கு 5 மாத குழந்தை பருவத்திலே இறைவன் வெட்டவெளி இரகசியத்தை உணர்த்தினார்!

இராமலிங்கத்தின் 6 மாத காலத்திலேயே தந்தை இராமையா பிள்ளையை காலன் அழைத்துக் கொண்டான் செய்வதறியாத திகைத்த தாய் சின்னம்மை தன் தாய் ஊரான பொன்னேரி சின்னக் காவணம் சென்றார். வறுமை வாட்டியது. அச்சமயம் இராமலிங்கரின் அண்ணன் சபாபதி, தாய் மற்றும் உடன் பிறந்தோருடன் சென்னை வீராசாமி பிள்ளை தெருவில் தங்கசாலை பகுதியில் குடியேறினார். அவர்படித்த படிப்பு, பாடம் சொல்லிகொடுத்தும் சமய பிரசங்கம் செய்தும் குடும்பம் நடத்த உதவியது.

இராமலிங்கம் வயது ஆறு ஆனதும் தமையனார் சபாபதிபிள்ளை பாடம் கற்பிக்கலானார். ஆனால் இராமலிங்கமோ மற்ற பிள்ளைகளைப்போல ஓடிஆடி விளையாடவும் இல்லை! படிப்பிலும் சிரத்தை இல்லாமல் இருந்தார்! அண்ணன் என்பதால் தன்னிடம் சரியாக கற்கவில்லை போலும் எனக் கருதிய சபாபதி தன் ஆசிரியரான காஞ்சிபுரம் மகாவித்துவான் சபாபதி முதலியாரிடம் இராமலிங்கரை அனுப்பினார். அண்ணன் சபாபதியிடம் இருந்த அதேநிலையில் தான் ஆசிரியர் சபாபதி முதலியாரிடமும் இராமலிங்கம் இருந்தார். ஏன்?

தாய் தந்தையுடன் 5 மாத குழந்தை பருவத்திலே சிதம்பர இரகசியம் இறைவனால் உணர்த்தப்பட்ட இராமலிங்கத்துக்கு இந்த ஏட்டுச் சுரைக்காய் இரசிக்கவில்லை! உலகர் வழங்கும் கல்விக்கு மேலான ஞானக்கல்வியை இறைவன்தான் 5 மாத குழந்தையாய் இருந்தபோதே இராமலிங்கருக்கு வழங்கியருளினானே!! அவர் மனம் சதா சர்வ காலமும் இறைவனைப் பற்றியே சிந்தித்தது! வேறு எதுவும் அவர் காதில் ஏறவில்லை!

"தாய்முதலோ ரோடு சிறு பருவமதில் தில்லைத்
தலத்திடையே திரைதூக்கத் தரிசித்த போது
வேய்வகைமேல் காட்டாதே என் தனக்கே எல்லாம்
வெளியாகக் காட்டிய என் மெய் உறவாம் பொருளே"

- அருள்விளக்கமாலை - திருவருட்பா

வள்ளல் பெருமானே திருவருட்பாவிலே இப்படி குறிப்பிடுகிறார்! இறைவன் தான் வள்ளலாருக்கு குரு! வேறு எங்கும் சென்றதில்லை எவரிடமும் படித்ததுமில்லை! பள்ளியில் பயிலாது பாமாலை பாட

அருளினான் இறைவனே! அண்ணன் சபாபதி அனுப்பிய அவராசிரியரிடம் போனபோது, "ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம்! ஒருவரையும் பொல்லாங்கு சொல்ல வேண்டாம்! மாதாவை ஒரு நாளும் மறக்க வேண்டாம்!" என இப்படி வேண்டாம் வேண்டாம் எனக் கூறக் கேட்டு வருந்தினார் 6 வயது இராமலிங்கர்.

இறைவனிடம் பிரார்த்தனை செய்யும் போது வேண்டாம் வேண்டாம் என அமங்கலமாகவா கூற வேண்டும், வேண்டும் வேண்டும் என்றல்லவா வேண்டணும்?! என்றார்

"ஒருமையுடன் நினதுதிரு மலரடி நினைக்கின்ற
உத்தமர்தம் உறவுவேண்டும்
உள்ஒன்று வைத்துப் புறம்ஒன்று பேசுவார்
உறவுகல வாமைவேண்டும்
பெருமைபெறு நினதுபுகழ் பேசவேண் டும்பொய்மை
பேசா திருக்கவேண்டும்
பெருநெறி பிடித்தொழுக வேண்டும்மத மானபேய்
பிடியா திருக்கவேண்டும்
மருவுபெண் ஆசையை மறக்கவே வேண்டும்உனை
மறவா திருக்கவேண்டும்
மதிவேண்டும் நின்கருணை நிதிவேண்டும் நோயற்ற
வாழ்வில்நான் வாழவேண்டும்
தருமமிகு சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்
தலம்ஓங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே"

- தெய்வமணிமாலை - திருவருட்பா

இப்படி சென்னை கந்தகோட்டத்து முருகன் சந்நிதியில் மனமுறுக பாடிப்பரவினார் வள்ளலார்! வள்ளல் பெருமான் தன் முற்பிறவிகளிலேயே சரியை கிரியை யோக சாதனைகளை முடித்து ஞானம் பெறவே பெற்றது இப்பிறப்பு! அதனால்தான் எல்லாம் இறைவன் அருளால் விளங்கப்பெற்றார்! இறைவன் சந்நிதியிலேயே பாடி மகிழ்ந்திருந்தார். அச்சிறுவயதிலேயே தமிழில் அற்புதமான தெய்வ பாடல்களை பாடும் வல்லமை பெற்றிருந்தார்! ஓதாது உணர்ந்தவர்! இறைவன் அருளால் சகலமும் அறிந்த அற்புதஞானியானார்!

இதுவிபரம் அறியாத அண்ணன் சபாபதி தம்பி இராமலிங்கம் ஒழுங்காக படிக்காமல் ஊர் சுற்றுகிறான் என தவறாக புரிந்து கொண்டு தன் மனைவியிடம் இனி இவனுக்கு சாப்பாடு கொடுக்காதே என்றார். ஆஹா ரொம்ப நல்லது என இராமலிங்கம் கோவில் குளம் என்று ஆனந்தமாக சென்றார். அண்ணியின்

வேண்டுகோள்படி வீட்டில் அண்ணன் இல்லாதபோது மாலைநேரத்தில் ஒருவேளை உணவருந்திவந்தார்.

ஒருநாள் தன் தந்தையார் திதி வந்தது. சபாபதி அறுசுவை உணவு படைத்து பலருக்கும் வழங்கி உண்டார். தன் தம்பி இராமலிங்கம் உணவுண்ண வரவில்லையே என வருந்தினார். வழக்கம் போல் மாலைவந்த இராமலிங்கத்துக்கு அண்ணியார் உணவு பரிமாறினார். அண்ணன் சொற்படி எல்லோரையும் போல படித்தால் இப்படி ஆறிப்போன உணவு சாப்பிட வேண்டாமே எனகூறி கண்ணீர் விட்டு அழுதாள். தாய்க்கு நிகரான அண்ணியின் கண்ணீரை கண்ட வள்ளல்பெருமான் பதைபதைத்தார். உடனே அண்ணியிடம் இனி நான் ஒழுங்காக வீட்டிலிருந்தே படிக்கிறேன் எனக்கு மாடியில் ஒரு அறையை ஒதுக்கித் தாருங்கள் என்று கூற அண்ணி அண்ணனிடம் கூற இருவரும் மகிழ்ந்து சரி அப்படியே ஆகட்டும் என்றனர்.

ஒரு நிலைக் கண்ணாடியும் விளக்கும் ஞான நூற்களுடன் அவ்வறையில் புகுந்தார் இராமலிங்கம்! சதாகாலமும் பாடிக்கொண்டும் தியானத்தில் ஆழ்ந்தும் இருப்பார்! ஒருநாள் முருகப்பெருமானை தன் முன்னாலே கண்டார்!

"சீர்கொண்ட தெய்வ வதனங்கள் ஆறும் திகழ்கடப்பந்
தார் கொண்ட பன்னிரு தோள்களும் தாமரைத் தாள்களும் ஓர்
கூர் கொண்ட வேலும் மயிலும்நற் கோழிக் கொடியும் அருட்
கார் கொண்ட வண்மைத் தணிகா சலமும் என் கண்ணுற்றதே"

பிராத்தனை மாலை - திருவருட்பா

யாருக்கு கிட்டும் இப்படி ஒரு பாக்கியம்! திருஞானசம்பந்தர் 3 வயது குழந்தையாயிருந்தபோது கண்டாரே, அமுதம் உண்டாரே தோடுடைய செவியன் அருளாலே! அதுபோல பிறப்பால் ஊமையான குமரகுருபரன் திருச்செந்தூர் முருகன் அருள்புரிய, பாடும் வல்லமை பெற்று மதுரை வந்தபோது கண்டாரே பரிசுபெற்றாரே மதுரை மீனாட்சியம்மை திருக்கரத்தாலே!

அதுபோலவே 5 மாத கைக்குழந்தையாய் இருந்தபோதே ஆட்கொண்ட தில்லை நடராஜபெருமான்! 6 வயதிலே கந்தகோட்டத்து முருகப்பெருமான் தொடர்ந்து தணிகை வேலவனும் காட்சி கொடுத்து ஆட்கொண்டனரே! இராமலிங்கம் என்ற சிறுவன் இறை குழந்தையாய் வளர்ந்து வந்தது.

தமையனார் சபாபதி சோமுசெட்டியார் எனும் அன்பர்வீட்டில் தொடர்சொற்பொழிவு நிகழ்த்திவந்தார். ஒருசமயம் சபாபதி நோய்வந்து போக முடியாமல் போக தம்பி இராமலிங்கத்தை அழைத்து நீ சென்று பெரியபுராணபாடல் ஒன்றுபாடி என்நிலை கூறிவா என பணித்தார்.

சோமுசெட்டியார் வீட்டில், சபாபதிவராமல் தம்பியை, சிறுவனை அனுப்பியிருக்கிறாரே என நினைத்திருந்தோர் மத்தியில் திருஞானசம்பந்தர் புராணம் பாடல் ஒன்றுபாட சபையோர் அத்தெய்வீககானத்தில் மெய்மறந்தனர்!! இராமலிங்கரையே பேசச்சொன்னார்கள் மடைதிறந்த வெள்ளம்போல் இரவு நெடுநேரம் வரை கேட்டவர் மனம் மயங்க சொற்பொழிவு ஆற்றினார் இராமலிங்கர்!

அடுத்தமுறை வந்தபோது, தம்பியே வந்தால் போதும் என சொல்ல சபாபதி திகைத்தார். அப்படி என்னதான் பேசுகிறான் இந்த இராமலிங்கம் என கருதி யாருமறியாமல் மறைந்து நின்று கேட்டார். வீடுவந்து மனைவியிடம் இராமலிங்கம் புராண சொற்பொழிவு ஆற்றும் பாங்கை எடுத்தியம்பி அவன் என் தம்பியல்ல தெய்வமே என கூறி அழுது அரற்றினார்.

என் தம்பி இராமலிங்கம் அருமை அறியாமல் இந்த சிறுவயதிலே சாப்பாடு போடாமல் பட்டினி போட்டு துன்புறுத்தி விட்டேனே நான் மாபாவி என்றவாறு அழுது புலம்பினார் வீட்டுக்கு வந்தார் இராமலிங்கம் அண்ணனும் அண்ணியும் நெடுஞ்சாண்கிடையாக விழுந்து வணங்கி தாங்கள் அறியாது செய்த பிழை பொறுத்தருள வேண்டும் என்று வேண்டினர். பெற்றோருக்கு இணையான நீங்கள் என்காலில் விழுவது முறையன்று என்றுதடுத்து கூறி தேற்றினார் இராமலிங்கம். தொடர்ந்தது வள்ளலாரின் சொற்பொழிவு! வெறும் கதை மட்டும் கூறாமல் தத்துவ விளக்கமும் கூறி எல்லோரையும் மகிழ்ச்சியில் ஆழ்த்தினார்!

ஒன்பதாவது வயதிலேயே வள்ளல் பெருமான் இறைவனால் முழுவதும் ஆட்க்கொள்ளப்பட்டார். "என்னை ஆண்டாறு மூன்றாண்டில் ஆண்டுகொண்ட அருட்கடலே" என திருவருட்பாவிலே வள்ளலாரே கூறுகிறார். அதுமுதல் வள்ளல்பெருமானின் மகத்துவம் சென்னை எங்கும் பரவலாயிற்று! பெருமானார் தினமும் தங்கசாலை வீராசாமிபிள்ளை தெருவிலிருந்து திருவொற்றியூர் வரை சுமார் 15கி.மீ தூரம் நடந்து சென்று திருவொற்றியூர் தியாகேசபெருமானையும் வடிவுடைமாணிக்க அம்மனையும் வணங்கி வரலானார். இறைவனை பணிவது ஒன்றையே இலட்சியமாக கொண்டு வாழ்ந்தார்! இறையருளால் இராமலிங்கரின் ஞானம் பொங்கி பூவுலகுக்கும் பயன்கொடுத்தது!

ஒருநாள் திருவொற்றியூர் சென்று வீடுதிரும்புகையில் இரவு நேரமாயிற்று. யாரையும் எழுப்ப வேண்டாம் என்று வீட்டுவாசல் திண்ணையிலேயே படுத்து தூங்கி விட்டார். சற்றுநேரத்தில் அண்ணியார் வந்து எழுப்பி சாப்பாடு கொடுத்தார்கள் சாப்பிட்டு

படுத்தார். சிறிது நேரங்கழித்து அண்ணி வந்து சாப்பிட கூப்பிட்டார். இராமலிங்கர் வியந்து என்ன அண்ணி சற்று முன் தானே சுவையான அமுதம் தந்தீர்கள் அதோ இலை கூட கிடக்கிறதே மீண்டும் சாப்பிட கூப்பிடுகிறீர்களே என்றதும், அண்ணியார், இல்லையே நான் இப்போது தானே வந்தேன் என்றதும் இராமலிங்கர் தன் ஞான திருஷ்டியால், தனக்கு சற்றுமுன் அண்ணியார் உருவில் வந்து அமுது படைத்தது திருவொற்றியூர் வடிவுடை மாணிக்கத் தாயே என்றறிந்தார்!! பெருமகிழ்வெய்தினார்! வாலைத்தாயே வடிவுடையம்மன்! ஞானக் குழந்தைக்கு அமுதம் தந்தாள்!!

"தெற்றியிலே நான் பசித்து படுத்திளைத்த தருணம்
  திரு அமுதோர் திருக்கரத்தே திகழ்வள்ளத் தெடுத்தே
ஒற்றியிற்போய்ப் பசித்தனையோ என்றெனையங் கெழுப்பி
  உவந்துகொடுத் தருளியஎன் உயிர்க்கினிதாந் தாயே
பற்றிய என் பற்றனைத்தும் தன் அடிப்பற்றாப்
  பரிந்தருளி எனை ஈன்ற பண்புடைஎந் தாயே
பெற்றியுள்ளார் சுற்றி நின்று போற்றமணிப் பொதுவில்
  பெருநடஞ்செய் அரசே என் பிதற்றும் உவந்தருளே".

- அருள்விளக்கமாலை - திருவருட்பா

இராமலிங்கனாரின் இருபத்தாறாவது வயதில் 1849-ல் தொழுவூர் வேலாயுத முதலியார் 17 வயது ஆனவர் தாமே பல பாடல்களை இயற்றி இவை சங்ககாலப் பாடல்கள் என இராமலிங்கரிடம் கூறி தந்தார். அதை கண்ணுற்ற நம் வள்ளல்பெருமான் தமிழ் மேதையான இராமலிங்கர் அவர் கூற்று பொய்யென்றுரைத்து நாணிடச் செய்தார். இராமலிங்கரை அவர்தம் புலமையை சோதிக்க வந்த தொழுவூர் வேலாயுத முதலியார் அன்று முதல் வள்ளலாரின் மாணாக்கரானார்.

இராமலிங்கரின் இருபத்தேழாவது வயதில் 1850-ல் உற்றார் வற்புறுத்தலாலும் ஊழாலும் திருமணம் செய்ய சம்மதித்தார். வள்ளலாருக்கு இல்லறத்தில் அணுவளவேனும் விருப்பமில்லை! எல்லாம் வல்ல இறைவனை சேரவேண்டி அல்லும் பகலும் பாடுபடும் இராமலிங்கம் கேவலம் பெண் ஆசையில் விழுவாரா என்ன? திருமணம் முடித்து தம்பதிகளை பள்ளியறைக்கு அனுப்பினர் உறவினர். ஆனால் இராமலிங்கர் இறைவன் பள்ளிகொண்டிருக்கும் திருவறை தரிசனத்துக்கு அல்லவா ஏங்கி தவிக்கிறார்! உலக மாயையில் சிக்குண்ட உறவினர் இதை அறியவில்லை! பள்ளியறை வந்த மணமகளை உட்காரவைத்து திருவாசகத்தின் மகிமையை கூறி இரவெல்லாம் திருவாசகத்தைத்தான் படித்துக் காட்டினார்!

விடிந்தது இரவு. ஆதவன் உதித்தான். வள்ளலார் அன்றே இல்வாழ்வை துறந்தார். ஐயோ, இராமலிங்கத்துக்கு சகோதரி

உண்ணாமுலை மகள் தனம்மாளை மணம்முடித்து தீரா பழிக்கு ஆளாகினோமே என உற்றார் உறவினர் வருந்தினர். விட்டகுறை முன்ஜென்ம தொடர்பு தாலிகட்ட தொட்டது மட்டுமே வள்ளலார் செயல்! "ஒருத்தியைக் கைதொட சார்ந்தேன்... தொட்டனன் அன்றிக் கலப்பிலேன்" என்று திருவருட்பா கூறுகிறது வள்ளல் பெருமான் வாயாலே!

1858-வரை தனது முப்பத்தைந்து வயது வரை சென்னை பெற்ற புண்ணியம் வள்ளலார் வாழ்ந்தது! இந்நாளில் இராமலிங்கர் செய்த தமிழ்த்தொண்டு ஏராளம். பலப்பல வித்வான்களும் மேதைகளும் வந்து வள்ளலாரிடம் பாடம் கேட்டனர். சிறார்களுக்கும் நீதி நூற்களை கற்பித்தார்.

நூற்களை பதிப்பித்தார். உரைநடைநூல் அரிதாகத் தோன்ற தொடங்கிய அக்காலத்தில் மனுமுறை கண்டவாசகம் ஜீவகாருண்ய ஒழுக்கம் என்ற நூற்களை எழுதினார். சிலருக்கு சாற்றுக்கவி வழங்கினார்கள். அதில் மாயூரம் முன்சீப் வேதநாயகம்பிள்ளை இயற்றிய நீதிநூலும் ஒன்று!

சென்னையின் ஆரவாரமிகுந்த தன்மை இராமலிங்கருக்கு விருப்பமில்லாமல் போனது. குடும்பம் சுற்றம் என்றிருப்பதையும் விரும்பவில்லை. தனிமையை விரும்பினார். இறைவனை அடைய வேண்டுமென்ற தீராப் பசி அதிகரிக்க, விழிப்புணர்வோடு இருக்க விரும்பினார். தவமே ஒரே குறிக்கோளாக கொண்டார்! ஆரவாரமில்லா அமைதியான இடம் தேடி நடக்கலானார். சென்னையை விட்டு புறப்பட்டு விட்டார். 5 மாத குழந்தையான இராமலிங்கரை ஆட்கொண்ட தில்லை சிற்றம்பலவாணன் 35 வயதில் மீண்டும் தன்னைக் காண அழைத்தார்!

வள்ளல் பெருமானின் பன்முக ஞானம் பாரறிந்தது! நூற்களை இயற்றியதால் நூலாசிரியர். நூற்களுக்கு உரை செய்ததால் உரையாசிரியர். நூற்களை பதிப்பிக்கவும் செய்ததால் பதிப்பாசிரியரும் ஆனார். பலருக்கும் பாடஞ்சொல்லும் போதகாசிரியரும் ஆவார். திருவருள் ஞானத்தை மரணமிலா பெருவாழ்வு பெறவழி விழி காட்டியமையால் ஞானாசிரியர்! உலகெலாம் எனும் மெய்ம்மொழிப் பொருள் விளக்கம் "தமிழ்" எனும் சொல்லுக்கிட்ட உரை தமிழின் பெருமை முதலியவற்றை வியாக்கியானம் செய்த பெருந்தகையாதலின் வியாக்கியான கர்த்தருமானார்!

தம்மை நாடிவந்த பலரின் நோயை தாமே மருந்து கொடுத்து குணப்படுத்தினார். மருத்துவ குறிப்புகள் தொகுத்து வழங்கினார். ரசவாதம் புரிவதிலும் வல்லவர் சித்தராய் ஞானியாய் திகழும் ஒருவரே

இதையெல்லாம் செய்ய முடியும்! வள்ளல் பெருமான் இதிலெல்லாம் வல்லவர். வள்ளலார் ஒரு சித்தர்! வள்ளலார் ஒரு மாபெரும் ஞானி!

நாத்திகம் பேசுகின்றோரும் வள்ளலாரை போற்றுவர்! ஏன் தெரியுமா? வள்ளலாரின் சமுதாய சீர்திருத்தக் கருத்துக்களால் கவரப்பட்டதால் தான்! வள்ளலாரால் சமயத்திலும் சீர்திருத்தம் ஏற்பட்டது என்றால் வள்ளலாரின் அருள் திறத்தை என்னென்பது! கணவன் இறந்தால் மனைவி தாலி இழக்க வேண்டாம். ஜாதி சமய மத ஆச்சாரம் பார்க்கக்கூடாது. சமுதாயத்தில் உயர்ந்தவன் தாழ்ந்தவன் கிடையாது. கருமாதி திதி முதலியன செய்ய வேண்டாம். சிறு தெய்வ வழிபாடு கூடாது. தெய்வங்களின் பெயரால் உயிர்ப்பலி கூடவே கூடாது. "புலை கொலை தவிர்த்தவரே உள்ளே வரலாம்" என சத்திய ஞானசபை வாசலிலே வள்ளல் பெருமான் கல்வெட்டிலே பொறித்து வைத்துள்ளார். சீர்திருத்தவாதிகள் போற்றும் சீர்திருத்தவாதி வள்ளலார்!

வள்ளலார் இறைவன் அருள்பெற்று சிறுவனாயிருக்கும் போதே பாடிய பாடல்கள் ஏராளம்! சுமார் 6000 பாடல்களுக்கு மேலாக திரு அருளால் பாடிய பாடல் தொகுதிதான் திருவருட்பாவாகும்! அருட்கவி அருள் ஞானி வள்ளலார் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை! அன்பர்களால் திரு அருள் பிரகாச வள்ளலார் என போற்றப்பட்டார்!

வள்ளல் பெருமானை சுந்தரமூர்த்தி நாயனாருக்கு அருளிய திருவொற்றியூர் தியாகராஜபெருமான் பல விதத்திலும் அந்தணராய் முதியவராய் அர்ச்சகராய் வந்து ஞான நிலையில் பல அனுபவங்காண அருள்புரிந்தார். திருவொற்றியூர் வடிவுடை மாணிக்க தாயோ காட்டிய பரிவுக்கு ஈடேயில்லை!

பட்டினத்தார் சமாதி கோவிலுக்கும் அடிக்கடி போவார் நம் வள்ளல் பெருமான்! அங்கிருந்த பாட்டி ஏதாவது அற்புதம் நிகழ்த்த வேண்டுமென பலநாளும் கேட்க, ஒருநாள் கீழேகுனிந்து ஒருகை கடற்கரை மணலை எடுத்து பாட்டிகையில் கொடுத்து மூடி நான் போனபின் திறந்துபார் என்று கூறிப் போனார். பாட்டிகையை திறந்தார் மண்துகள்கள் ஏராளமான சின்ன சின்ன சிவலிங்கமாயிருந்தது!

ஒருமுறை திருவொற்றியூர் கோவிலுக்கு போகும் வழியில், ஒரு நிர்வாண சாமியார் அவ்வழியே வருவோர் போவோரையெல்லாம் நாய்போகிறது நரி போகிறது கழுதை போகிறது என்று அவரவர் குணத்துக்கு தக்கபடி கூறுவார் அவரை உலகம் பைத்தியம் என்றது! வள்ளலார் அவர் இருக்கும் வழியே வந்தபோது அந்த நிர்வாண சாமியார் தன் மானத்தை மறைத்துக் கொண்டு எழுந்து நின்று இதோ ஒரு உத்தமமான மனிதன் வருகிறான் என்றார்!! வள்ளலார் அருகில்

சென்று அவர் காதில் ஏதோ கூற அதுமுதல் அவரை அங்கே காணோம்!

ஒருமுறை திருவொற்றியூர் சென்று வருகையில் களைப்பு மிகுதியால் ஒரு மண்டபத்தில் சற்று கண்ணயர்ந்தார். அந்நேரம் கள்வன் ஒருவன் அவர் காதிலுள்ள கடுக்கனை மெதுவாக கழற்றினான். இதை அறிந்த வள்ளலார் தூக்கத்தில் புரண்டு படுப்பதைபோல் படுத்து அடுத்த கடுக்கனையும் கழற்றிப் போக விடுத்தார்! கள்வனுக்கும் கருணை புரிந்த கருணாமூர்த்தி நம் வள்ளல்பெருமான்!

சிறுவயதில் நிறைய முடிவளர்த்திருந்த நம் பெருமான் பிற்பாடு இடையில் ஒருவெள்ளை வேஷ்டியும் மேலே ஒரு வெள்ளை துண்டால் தலையில் முக்காடு போட்டுமே இருந்தார். ஒருக்காலும் காவி கட்டிக் கொண்டாரில்லை. திடசித்தம் இல்லாதவரே சன்னியாசம் பெற்று சடா முடி ருத்திராட்சம் அணிந்து காவியுடன் இருக்க வேண்டும் என்றார். எப்போதும் கைகளை கட்டியே நடந்தார். எல்லோரையும் போல கைகளை வீசி நடக்க மாட்டார் பேசும்போது கனிவாக மெல்லவே பேசுவார். அதிர்ந்து பேசமாட்டார். சிறுவயது முதலே ஒரு வேளையோ இருவேளையோ உணவருந்துவார். சிறிதளவே கொண்டார். காண்பவர் கவரும் அருட் கண் கொண்டவர். மெலிந்த தேகம். ஒரு சமயம் புகைப்படம் எடுத்தபோது அவர் உருவம் பதியவில்லை! ஒளிவடிவை புகைபடம் எடுக்க முடியாதே! எப்போதும் அவரைச் சுற்றி அன்பர்கள் பலர் இருப்பர். தமிழ் மேதை என்று சிலரும் அருள்ஞானி என்று சிலரும் வித்தைகற்க பாடம்கேட்க எனப் பலரும் உடனிருந்தனர். கனி கனிந்ததால் பறவை கூட்டம் நாடி வந்ததில் வியப்பில்லையே!

35 வயதில் புது உலகம் காண சிதம்பரம் நோக்கி நடந்தார் வள்ளல் பெருமான்! கந்தகோட்டம் முருகனே கதி என்றிருந்த இராமலிங்கத்தை தணிகை வேலவன் தன் பக்கம் ஈர்த்தார்! விடுவாரா திருவொற்றியூர் தியாகராஜன் வடிவுடைமாணிக்கம்! தந்தையும் தாயுமாகி தனயன் இராமலிங்கத்தை ஏறா நிலைமிசை ஏற்றுவித்து சகல கலைஞானமும் துலங்கவைத்த உலகம் போற்றும் உத்தம ஞானியாக வல்ல சித்தராக கருணையே வடிவாக மாற்றி அருள்மழை பொழிந்து உயர்த்தினர்!!

தன் பங்குக்கு தில்லை அம்பலவாணனும் அருள் மழை பொழிந்தான் தன் பிள்ளை இராமலிங்கத்துக்கு! அக்காலத்தே அருகிலுள்ள திருத்தலங்கள் பலவற்றுக்கும் போனார் வள்ளல்பெருமான்! சென்னை அருகிலுள்ள தலங்களையும் முன்பு கண்டகளிப்பே இப்போதும் வள்ளல் பெருமானுக்கு! ஒருமுறை சிவத்தலம் ஒன்றிற்கு சென்ற இராமலிங்கம் அங்கே சிவலிங்கத்துக்கு

கிழிந்த ஆடை சார்த்தியிருந்ததை கண்டு வேதனையுடன் பாடினார். பின் அக்கோயில் இன்றளவும் செல்வ செழிப்புடன் விளங்குகிறது.

தில்லையிலே வள்ளல் பெருமானை கண்ட மாத்திரத்திலே பெரியசாமி என்றுணர்ந்த கருங்குழி மணியக்காரர் வேங்கடரெட்டியார் தன் வீட்டில் தங்கும் படி பணிவுடன் அன்புடன் வேண்ட வள்ளல் பெருமானும் கருங்குழிக்கு எழுந்தருளினார். வடலூர் அருகே உள்ள சிற்றூர். 150 வருடத்திற்கு பின்பு இப்போதும் அது சிற்றூர்தான்.

வள்ளல்பெருமான் 1858 முதல் 1867 வரை கருங்குழியிலே தான் தங்கி இருந்தார். உண்மையான அன்பர் வேங்கடரெட்டியார் அவர் செய்த புண்ணியம் ஞானி ஒருவர் அவர் வீட்டில் தங்கியது! பெருமானார் அங்கிருந்து அடிக்கடி சிதம்பரம் சென்று வருவார்.

இரவில் பலநாள் வள்ளலார் திருவருட்பாடல் பல எழுதிக்கொண்டிருப்பார். இதை அறிந்த வேங்கடரெட்டியார் விளக்கு ஒன்றும் கொடுத்திருந்தார் எண்ணெய் செம்பும் வைத்திருப்பார். ஒருநாள் இரவு வள்ளல் பெருமான் எழுதிக் கொண்டிருந்தார் அப்போது விளக்கொளி மங்கவே பக்கத்தில் இருந்த எண்ணெய் கலயத்தை எடுத்து விளக்கில் ஊற்ற இரவு முழுதும் பிரகாசமாக விளக்கு எரிந்தது! வள்ளலாரும் எழுதி முடித்தார். மறுநாள் காலை ஊரிலிருந்து திரும்பிய வேங்கடரெட்டியார் மனைவி பதறிப்போய் விளக்கை பார்க்க விளக்கில் தண்ணீர் நிரம்பியிருந்தது. அப்போது அவர் எண்ணெய் கலயம் பழையது உடைந்து விட்டதால் புது கலயம் வாங்கி வைத்தேன். அது பழகுவதற்காக தண்ணீர் ஊற்றி வைத்திருந்தேன். ஊர் போகும் அவசரத்தில் தண்ணீரை மாற்றி எண்ணெய் விட மறந்து போய்விட்டேன். ஆனால் பெருமானோ தண்ணீரை எண்ணெய் என எண்ணி விளக்கில் ஊற்ற அது இரவு முழுவதும் வழக்கத்தை விட அதிக பிரகாசமாக எரிந்தது என அறிந்த போது பெரும் ஆச்சர்யமும் மகிழ்ச்சியும் அடைந்தார். "தண்ணீர் விளக்கும் எரிந்தது என வள்ளல் பெருமானும் வியந்து இறையருளை போற்றுகிறார்.

"தண்ணீர் விளக்கெரித்த தன்மைபோன் மாந்தர்தம்
உண்ணீர் சிவம்விளங்க ஓங்குவிக்கும் கண்மணியாம்
நங்கள் இராமலிங்கன் நல்ல அருட் பாமுறையைத்
துங்கமுற மாணா தொழு"

என்று மதுரை ஆதீனம் சிதம்பரசுவாமிகள் திருவருட்பா நூற்சிறப்புப் பற்றி பாடினார்.

பழத்தை ஈ மொய்ப்பதுபோல தன்னை நாடிவரும் அன்பர்களுக்கு நல்வழி காட்ட முனைந்தார் வள்ளலார். அதன் முதல் காரியமாக

வள்ளலார் சமரச சுத்தசன்மார்க்க சத்திய சங்கம் என்று ஒரு சங்கம் தொடங்கினார். சங்கத்திற்கென கொள்கைகள் வகுத்தார். கடவுள் ஒருவரே, ஒளியே. அவரை உண்மை அன்பால் தான் வழிபடமுடியும் என்றும் ஞானநிலைகளை கூறினார். இவ்வரிய ஞானத்தை சன்மார்க்கத்தை பரப்பிடவே சங்கம் ஆரம்பிக்கப்பட்டது கருங்குழியில் 1865-ல் துவங்கப்பட்டது.

சாகாதவனே சன்மார்க்கி! சன்மார்க்கியின் இலட்சியம் மரணமிலா பெருவாழ்வு! அதற்காக சன்மார்க்கிகள் கடைபிடிக்க வேண்டியது ஆன்மநேய ஒருமைப்பாடும் ஜீவகாருண்ய ஒழுக்கமுமேயாகும்! மனிதனுக்கு மனிதன் அன்பாக நேயமாக இருப்பது மட்டுமல்ல சகல ஜீவராசிகளிடமும் அன்பு காட்டுவது தான் சகல ஆன்மாக்களிடமும் நேயம் கொள்வதுதான் ஆன்மநேய ஒருமைப்பாடு!

ஜீவகாருண்ய ஒழுக்கம் என்றால் சாப்பாடு போடுவதல்ல!? சகல ஜீவர்களையும் கருணையோடு காணவேண்டிய நீ, ஆன்மநேய ஒருமைப்பாடு உடையவனாக விளங்கும் நீ உன் ஜீவனையும்-ஆன்மாவையும் கருணையோடு பார்த்தாலே முக்தி! மரணமிலா பெருவாழ்வு! இந்திரிய ஒழுக்கம் கரண ஒழுக்கம் ஜீவ ஒழுக்கம் ஆன்ம ஒழுக்கம் எல்லாம் இருந்தாலே ஜீவகாருண்ய ஒழுக்கம் என்று நமது வள்ளல் பெருமான் தெளிவாக விளக்கமாக தனியாக ஒரு நூலே எழுதியுள்ளார்! ஒவ்வொரு சன்மார்க்கியும் அவசியம் படிக்க வேண்டும்! அப்போதுதான் வள்ளல் பெருமான் என்ன சொன்னார் என்று புரியும்!

அடியேன் "ஆன்மநேய ஒருமைப்பாடு", "ஜீவகாருண்யம்" என இரு நூற்கள் இலவசமாக வெளியிட்டுள்ளேன். வாங்கி படித்து உண்மையிலேயே வள்ளலார் என்ன சொன்னார் என அறிந்து கொள்ளுங்கள்! வள்ளலார் மேல் வெறும் பக்தி மட்டுமே கொண்டுள்ளீர்? வள்ளலார் உரைத்த ஞானம் அறிய வேண்டாமா? மரணமிலா பெருவாழ்வு பெற வேண்டாமா? "சாகாதவனே சன்மார்க்கி!" என வள்ளல் பெருமான் தெளிவாக சொல்லியிருக்கிறார்! சாப்பாடு போடுபவன் சன்மாக்கி என்று சொல்லவில்லை!!

வீண்வாதம் புரியாமல், எல்லாம் வல்ல அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரை உன்னில் காண உணர ஞானசரியையில் நினைந்து நினைந்து என்ற பாடலில் சொல்லியபடி உன் கண் மணியில் துலங்கும் ஒளியை நினைந்து உணர்ந்து தவம் செய்! உன் சிர நடுவே துலங்கும் உன் ஆத்ம ஜோதி தரிசனம் கிட்டும்!?

எவ்வித பேதமுமின்றி உலகிலுள்ள யாராயினும் இவ்விதம் சாதனை - தவம் - தியானம் செய்தால் ஊன உடலே வள்ளலார்

போல் ஒளியுடலாகும்!! வள்ளலார் போல நாமும் மரணமிலாபெருவாழ்வு பெறலாம்!! சிரஞ்சீவி ஆகலாம்! இது சத்தியம்! இதுவே வள்ளலார் காட்டிய வழி! இங்ஙனம் உலகுக்கே வழி காட்டுவதால் தான் வள்ளலாரே உலக குரு என்கிறேன் அடியேன்!!

சன்மார்க்க கொள்கைகளே சநாதன தர்மமென இதுகாறும் விளங்கிற்று!? இன்னும் பற்பல நல்ல அம்சங்களுடன் விளங்குவது தான் "சன்மார்க்கம்!" உலகுக்கு ஒரு மார்க்கம் அது உலககுரு கண்ட சன்மார்க்கமே! எவ்வித பேதமுமில்லாமல் உலகரை இணைக்கும் உன்னதமார்க்கம் சன்மார்க்கமே! இத்துணை மாபெரும் உன்னத ஒப்பற்ற சாகாகல்வி கண்ட சன்மார்க்கம் கண்ட திருவருட்பிரகாச வள்ளல் இராமலிங்க சுவாமிகளை அடியேன் உலக குரு என்றழைப்பதில் தவறொன்றுமில்லையே!

இன்றைய உலகில் எங்கும் குழப்பம் எதிலும் குழப்பம் மனிதன் நிம்மதியாக வாழமுடியவில்லை?! சர்வத்திர குழப்பம்?! யாரிடம் முறையிட? யாரை குறை சொல்ல? தெய்வத்திடம் தான் முறையிட வேண்டும்! ஆனால் தெய்வத்தையே பலவாறாக சொல்லி அங்கும் சண்டை! நாத்திகவாதிகள் பெருகிவிட்டனர்! ஆத்திகர்களிடம் மூடநம்பிக்கைகள் பெருகி விட்டது! என்ன செய்வது?

ஒரேவழி! அதுதான் வள்ளலார், நமது உலககுரு சொன்ன சன்மார்க்கம்! கடவுள் ஒருவரே இது எல்லோரும் சொன்னது தானே?! அந்த கடவுளே ஒளி எங்கும் நிறைந்தவர் சர்வ வல்லமை படைத்தவர் இதுவும் எல்லோரும் ஒப்புக்கொள்ளும் உண்மைதானே?! படைத்தான் படைத்தான் மனுவை படைத்தான்! படைத்தான் படைத்தான் உலகை படைத்தான் மனுவுக்கு!? மனுவை படைத்தான் தன்னை வணங்க?! அடியேன் சிறுவயதிலே கேட்ட ஒரு பெரியோர் சொல்லமுது இது! இறைவன் படைத்த உலகம் மனிதனுக்காக! மனிதனை ஏன் இறைவன் படைத்தான்? தன்னை வணங்க! மனிதனை இறைவன் படைத்தது இறைவனை வணங்கவல்ல? மனிதன் தன்னை தான்யார் என்பதை அறிந்து தன்னை தனக்குள்ளே அறிய உணர வணங்கிடவே தான்!!

எவ்வளவு பெரிய ஞானம் இது தெரியுமா? உலகில் உள்ள எல்லா ஞானிகளும் இதையே தான் சொன்னார்கள்? உலககுரு வள்ளலாரும் இதையே தான் சொல்கிறார் "சன்மார்க்கம்" என்று!! இதுதான் உண்மை என்று ஒப்புக்கொண்டால் உலகம் வாழும்! இதுதான் சத்தியம் என்று அறிந்தால் மனிதன் வாழ்வான்! உலகம் உய்ய சன்மார்க்கமே ஒரே வழி என்று உணருங்கள்! ஒழுக்கமாக பண்போடு அன்போடு வாழுங்கள்! அன்பே கடவுள்! அறிந்து உணர்க!!

கிட்டத்தட்ட பத்தாண்டுகாலம் கருங்குழியில் இருந்து கொண்டு உலகம் உய்ய சன்மார்க்க சங்கம் தொடங்கி அருள்பாலித்த உலககுரு நம் வள்ளல்பெருமான், கரும் குழியாகிய கண்மணி உள்ளே ஒளியை ஊன்றி இருந்து உள்ளே நடமிடும் நடராசன், இறை ஒளியை ஆத்ம ஜோதியை கண்டு பேருவகையுடன் பெருங்களிப்புடன் எண்ணற்ற தவ சாதனைகளை மேற்கொண்டு பேரானந்த பெருநிலை பெற்றார்கள்! வள்ளல் பெருமான் புரிந்த அற்புதங்களோ எண்ணிலடங்கா! கருங்குழி வேங்கட ரெட்டியார் வீடெதிரே ஆடு ஒன்று கன்றுகள் சில போட்டது! உடனே தாய் ஆடு என்ன காரணத்தாலோ விழுந்து இறந்து விட்டது. குட்டிகள் கத்தி கதறியபடி இருந்ததை கண்ணுற்ற வள்ளல் பெருமான் உடனே ஒரு செம்பு தண்ணீரும் ஒரு பிரம்பும் கொண்டு சென்று, தாய் ஆட்டின்மீது தண்ணீர் தெளித்து பிரம்பால் தட்ட இறந்த ஆடு உயிர் பெற்று எழுந்தது! குட்டிகள் மகிழ்வுடன் அதன் மடுவில் பால் குடித்து மகிழ்ந்தது. குட்டிகளின் மகிழ்ச்சியை கண்டு மகிழ்ந்தார் நமது உலககுரு வள்ளல் பெருமான்!

இறந்தாரை எழுப்பும் அற்புத ஆற்றல் பெற்றிருந்தார் நம் வள்ளல் பெருமான்! தண்ணீர் இல்லாமல் பயிர்கள் வாடி கிடப்பதை கண்டு வாடினார். வாடிய பயிரைக் கண்டும் வாடிய கருணையின் திருஉருவம், இரக்கத்தின் பிறப்பிடம் வள்ளல் பெருமானே!

1867-ல் வள்ளல் பெருமானின் மகிமை உணர்ந்த வடலூர் பார்வதிபுரம் கிராமவாசிகள் நாற்பதுபேர் சேர்ந்து எண்பது காணி நிலத்தை வள்ளலாருக்கு தானமாக கொடுத்தார்கள்.

23-05-1867 பிரபவ வைகாசி 11 வியாழனன்று வற்றாத அமுத சுரபி என விளங்கும், அற்றார் அழிபசி தீர்த்திட ஒரு தர்மச்சாலையை அன்னசத்திரத்தை ஏற்படுத்தினார். சமரச சுத்த சன்மார்க்க சத்திய தருமச்சாலை என பெயரிட்டார். பெயரிலேயே எப்பேதமுமில்லா சமரசம்! அப்பழுக்கில்லாமல் சுத்தம்! சகலரும் சேர்ந்த சன்மார்க்கம்! உண்மையான சத்தியமான! தர்மச் சாலை! சங்கமும் தருமச்சாலையும் இங்ஙனம் புனிதமானது!

எவ்விதபேதமுமின்றி வரும் யாராயினும் அவருக்கு புசிக்க உணவு வழங்கப்பட்டது! மூன்று வேளையும் தடையின்றி எல்லோருக்கும் கிட்டியது! வள்ளல் பெருமான், உணவு சமைத்திட தன் பொற்கரங்களால் ஏற்றிய அடுப்பு, 150 வருடங்களாக இன்றும் அணையாமல் தீ எரிந்து கொண்டிருக்கிறது! இது அற்புதமில்லாமல் வேறென்னது?

தொடர்ந்து நான்காண்டுகள் உலககுரு வள்ளல் பெருமான் வடலூரில் தருமச்சாலையிலேயே இருந்தார். எல்லா பெறுதற்கரிய பெரும் பேறெல்லாம் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் வள்ளலாருக்கு இங்கு தான் அருளினார்! சித்தரும் முத்தரும் தேடி வரலாயினர்! ஆன்மீகம் தழைத்தது! அருள்நெறி ஓங்கியது!

வடலூரில் வள்ளல் பெருமானாரால் உருவான தருமச்சாலையே சன்மார்க்க சங்க அலுவலகம். வள்ளல் பெருமான் இருக்குமிடம். தினமும் மூன்று வேளையும் வருவோருக்கு எல்லாம் அன்னதானம் தினமும் உலககுரு வள்ளலாரின் அருளுரைகள். சன்மார்க்க சங்கத்தாரின் வழிபாட்டு தலமாயிற்று தருமச்சாலை. வள்ளல் பெருமானுக்கோ தவச் சாலையாயிற்று. கடலூர் மு. அப்பாசாமி செட்டியார், சண்முகம் பிள்ளை, நமசிவாயம் பிள்ளை, கல்பட்டு ஐயா முதலான அன்பர்கள் தருமச் சாலையிலேயே இருந்து தொண்டாற்றினார்கள்! தினமும் ஏராளமான அன்பர்கள் அன்னதானத்திற்குரிய பொருட்களை காணிக்கையாக வழங்கினர். சீரும் சிறப்புமாக தருமச்சாலையும் சன்மார்க்க சங்கமும் வளர்ந்தது.

"காலையிலே நின்றன்னைக் கண்டுகொண்டேன் சன்மார்க்கச்
சாலையிலே இன்பம் தழைக்கின்றேன் - ஞாலமிசைச்
சாகாவரம் பெற்றேன் தத்துவத்தின் மேல்நடிக்கும்
ஏகா நினக்கடிமை ஏய்ந்து"

- 6-ம் திருமுறை - திருவருட்பா

"என்பாட்டுக் கெண்ணாதது எண்ணி இசைத்தேன் என்
தன்பாட்டைச் சத்தியமாத் தான்புனைந்தான் - முன் பாட்டுக்
காலையிலே வந்து கருணை அளித்தே தருமச்
சாலையிலே வா என்றான்தான்"

- 6-ம் திருமுறை திருவருட்பா

"காலையிலே என்றனக்கே கிடைத்த பெரும் பொருளே
களிப்பே என் கருத்தகத்தே கனிந்த நறுங்கனியே
மேலையிலே இம்மையிலே ஒருமையிலே தவத்தால்
மேவுகின்ற பெரும்பயனாம் விளைவை எலாம் தருமச்
சாலையிலே ஒரு பகலில் தந்ததனிப் பதியே
சமரச சன் மார்க்கசங்கத் தலைஅமர்ந்த நதியே
மாலையிலே சிறந்தமொழி மாலை அணிந்தாடும்
மாநடத்தென் அரசே என் மாலையும் அணிந்தருளே"

- 6ம் திருமுறை திருவருட்பா

தருமச்சாலையிலே வள்ளலார் இருந்து அருள்மழை பொழிந்தார்! பக்கத்து ஊர்களிலிருந்து எல்லாம் திரளான அன்பர்கள் வந்து வள்ளல்

பெருமானின் ஞான உபதேசங்களை கேட்டு சென்றனர். உண்மையிலே அவர்கள் பெரும் புண்ணியம் செய்தவர்களே! ஒப்பற்ற, முத்தேக சித்திபெற்ற, ஒளியுடல்பெற்ற, இணையில்லா, மெய்ஞ்ஞானியை நேரில் காண்கின்றதே பெரும் பாக்கியம்! அவர் திருவாய் சொல்லமுதமும் கேட்கப்பெற்றார்கள் என்றால் பூர்வஜென்ம புண்ணிய சாலிகள் தான்!

வள்ளல் பெருமானை வடலூரிலே தருமச் சாலையிலே என் முந்தைய பிறவியிலே ஒரு நாளாவது பார்த்திருப்பேன்!? ஒரு வேளையாவது தருமச்சாலையிலே உணவருந்தியிருப்பேன்!? வள்ளல் பெருமானின் இனிய குரலில் சாகாக்கல்வி உபதேசத்தை ஒருநாளாவது கேட்டிருப்பேன்!? வள்ளலாரின் அருட்கண்ணால் ஒரு கணமேனும் அடியேன் திருநோக்கம் பெற்றிருப்பேன்!?

அடியேன் உள்ளத்தில் அங்ஙனம் தான் உதிக்கிறது! அப்படிப்பட்ட பெறும் பெறுதற்கரிய பேற்றைப் பெற்றதால்தான் இப்பிறப்பில் வள்ளல்பெருமான் அருள் கிட்டியது! வலிந்தென்னை ஆட்கொண்டார் வள்ளல்! அதனால் தான் அடியேன் வள்ளல் பெருமான் உரைத்த சாகாக்கல்வியை மெய்ஞ்ஞானத்தை திருவடி தீட்சையை விளக்கி எளிமையாக இதுவரை 39 நூற்கள் எழுதி வெளியிட முடிந்தது!? இந்நூல் அடியேனின் 40-வது நூல்.

அதுமட்டுமா? பெறுதற்கரிய பெரும்பேறு, அடியேனை ஞான சற்குருவாக்கி குருபீடத்தில் இருத்தியது! கடந்த 10 ஆண்டுகளில் என்னுள்ளிருந்து வள்ளலாரே சுமார் 2000 பேர்களுக்கு ஞான தீட்சையும் வழங்கி அற்புதம் பேரற்புதம் புரிந்து வருகிறார்! யான் செய்த புண்ணியம் யாதோ? கடந்த பிறவியிலே தருமச்சாலையிலே திருவருட்பிரகாச வள்ளல் இராமலிங்க சுவாமிகள் அவர்களின் திருநோக்கம் ஒரு கணப்பொழுதேனும் பெற்றிருப்பேன் என யான் முழுமையாக நம்புகிறேன்!!

அதனால் தான், 1980-லிருந்து 33 வருடமாக சன்மார்க்க சங்கம் அமைத்து, தங்கஜோதி ஞானசபை அமைத்து, குருபீடமமர்ந்து, ஞானசற்குருவாக இருந்து, உண்மையான சிறந்த தூய சீடர்களை பெற்று உலகில் இதுவரை பரிபாஷையாக இரகசியமாக மறைவாக சொல்லப்பட்ட மெய்ஞ்ஞானத்தை சொல்ல முடிந்தது!!

உலகெங்கும் சன்மார்க்க சங்கம் உருவாக்கி அகவல்படித்து அன்னதானம் செய்வோர் ஏராளம்! வள்ளலார் சொன்ன சாகாக்கல்வியை கற்று மரணமிலா பெருவாழ்வு பெற வேண்டாமா? "சாகாதவனே சன்மார்க்கி" என்றல்லவா வள்ளலார் கூறுகிறார்! அதற்கு வழி தேட வேண்டாமா? அடியேன் மூலம் உலககுரு வள்ளலார் சொல்வது இது தான்! உன்னுள்துலங்கும் உன் ஆத்ம ஜோதியே

அருட்பெருஞ்ஜோதி ஆண்டவன்! அவனை அடைய உன் கடமாகிய உடம்பினுள் விழிவழியே உள் கட! அப்போது தான் நீ கடவுளை அறிவாய்! உணர்வாய்! வாருங்கள் ஞான உபதேசம் கேளுங்கள்! ஞானதீட்சை பெறுங்கள்! காணலாம் உன்னை நீயே! உனக்குள்ளே தான்! உலக குரு வள்ளலார் உடன் இருந்து காப்பார்! குரு பார்க்க கோடி வினையும் தீரும்! உன் முற்பிறவி வினை தீர்ந்திட கண்ணை திறந்து விழித்திருந்து விழிப்புணர்வுடன் விழியில் உணர்வுடன் தவம் செய்! ஞானம்பெறுவாய்! ஒளியுடல் பெறுவாய்! இது சத்தியம்! வள்ளலார் வாக்கு!

இறைவனை அடைய வேண்டும் என்ற ஆன்மபசியோடு இரு! வேறு எந்தவித சிந்தனையும் இல்லாமல் ஒரே சிந்தனையோடு உன்கண்மணி ஒளியிலேயே தனித்திரு! கண்களை விழித்திரு! கண்ணைமூடி தவம் செய்வோர் ஒரேயடியாக கண்ணை மூடுவர்! உன் புறக்கண்ணும் திறக்கணும்! தவத்தால் உன் அகக் கண்ணும் திறக்கணும்! இதுவே உலககுரு வள்ளலார் உரைத்த ஞான சாதனை!!

அவர் சொன்னார் இவர் சொன்னார் என வேறெந்த சாதனையும் செய்யாதீர்கள்! ஞானம் வேண்டின் இது ஒன்றே தவம் என கொள்க! உலகமே மறைக்கும் மாபெரும் ஞானவிளக்கம் அடியேனால் வள்ளல்பெருமான் சொல்கிறாரென்றால் உலகர் மீது வள்ளலார் கொண்ட கருணை தான் எத்தகையது?! சற்று சிந்தித்துப் பாருங்கள்!

தருமச் சாலையிலே பெரும்பாலும் தினமும் வள்ளல்பெருமானின் அருளுரை இருக்கும்! தேனை பருக எங்கிருந்தெல்லாமோ வண்டென ஆன்மதாகம் கொண்டோர் வரலாயினர். மனிதர்கள் மட்டுமா? வள்ளல்பெருமான் பேச்சை தினமும் ஒரு கால் ஊனமுற்ற ஆடு கேட்குமாம்! புண்ணியம் செய்த ஜீவன் அது!

ஒரு சமயம் வள்ளலார் பேச்சை கேட்க தொலை தூரத்திலிருந்து வந்த அன்பர், நேரமாகிவிட்டதே என்று குறுக்குப் பாதையில் ஒரு வாழை தோட்டம் வழியாக வேகவேகமாக வந்தார். எதிரே ஒரு நாகம் படமெடுத்து கடிக்கவர, அன்பர், இராமலிங்கம் மேல் ஆணை என பயத்தால் கத்த பாம்பு அப்படியே நின்றது. திரும்பிப் பார்க்காமல் ஓடி வந்துவிட்டார். ஆச்சு! வடலூரில் தருமச் சாலையில் வள்ளல் தரிசனமும் உபதேசமும்! உரை கேட்டு திரும்ப யத்தனிக்கையில் வள்ளல் பெருமான் அந்த அன்பரை கூப்பிட்டு உன்னால் ஒரு வாயில்லா ஜீவன் வதைபடுகிறதே விரைந்து சென்று என்மீது விடுத்த ஆணையை விலக்கிவிடு அதுபோய்விடும் என்றார்?! அப்போதுதான் அன்பருக்கு வழியில் நடந்தது நினைவுக்கு வந்தது. பெருமானிடம் ஆசிபெற்றுப் போனார்! ஆணையை விடுவித்தார் பாம்பும் ஓடி மறைந்தது! எங்கோ நடந்ததை வள்ளலார் எங்ஙனம் அறிந்தார்?

வாயில்லா ஜீவன் வதைபடுவதை காண சகியாமல் விரைந்து போ என்றாரே எவ்வுயிருக்கும் கருணை காட்டும் அந்த உள்ளம் எத்தகைய மேன்மையானது!! மென்மையானது!

இன்னொரு சமயம் அன்பர்களோடு வள்ளல் பெருமான் காட்டு பாதையில் நடந்துவரும் போது ஒரு நல்ல பாம்பு எதிர்பட கூட வந்தவர்கள் ஓட வள்ளலார் நின்றார். அப்பாம்பு வள்ளலாரின் காலை சுற்றி சிறிது நேரம் இருந்தது. சற்று தூரத்தில் இருந்த அன்பர்கள் கண்டனர். வள்ளலார் ஏதோ சொன்னதும் அப்பாம்பு விலகி அப்பால் சென்றது. வள்ளலாரின் பாத தரிசனம் பெறவந்தது அப்பாம்பு! யாரோ? எவரோ? எவ்வுயிரும் வள்ளலார் தம் உயிராகவே கருதினார்! மெய்ஞ்ஞானியின், கடவுள் மயமானவரின் இயல்பும் அதுதானே!

தருமச் சாலையிலே வள்ளல் பெருமான் அருளுரை கேட்கவரும் அன்பர் ஒருவருக்கு ஒரு சந்தேகம். வள்ளலார் ஏன் முக்காடு போட்டிருக்கிறார்? நேரே கேட்க தயக்கம் பயம். தன் புதல்வனை ஒரு நாள் கூட்டிவந்தார். புறப்படும் போது வள்ளலார் அந்த அன்பரை தனியே அழைத்து இதைத்தானே கேட்க விரும்பினாய் என்று தன் தலைமுக்காட்டை எடுத்தார்! ஒரே ஒளி வெள்ளம் அதை காணப்பொறாத அன்பர் மயங்கி மூர்ச்சையானார்! அன்பர்கள் மூர்ச்சை தெளிவிக்க எழுந்தவரிடம் இதுபற்றி எவரிடமும் கூறாதே எனக்கூறி அனுப்பினார் வள்ளலார்!

பாரத யுத்த களத்திலே அர்ச்சுனனுக்கு ஸ்ரீகிருஷ்ணர் விஸ்வரூப தரிசனம் கொடுத்தார்! அர்ச்சுனன், கண்ணா என்னால் பார்க்க முடியவில்லையே என் கண்கள் கூசுகின்றதே என்னால் தாள முடியவில்லையே என கதறினான்! பின் கண்ணன் அர்ச்சுனனுக்கு ஞான திருஷ்டியை வழங்கிய பின்னரே கண்டானாம்?! எனக்கு இந்த கதை தான் ஞாபகத்துக்கு வருகிறது! அதே யுத்தகளத்தில் மரண தருவாயில் இருக்கும் கர்ணனுக்கு ஸ்ரீ கிருஷ்ணர் விஸ்வரூப தரிசனம் தருகிறார் அர்ச்சுனனால் பார்க்க முடியாத விஸ்வரூபத்தை வள்ளல் கர்ணன் கண்டான் கண்குளிர! அழியாமுக்தியும் பெற்றான்! கொடைவள்ளல் கர்ணன்! அருள் வள்ளல் வள்ளலார்!

ஒரு சமயம் வள்ளலார் அன்பர்களுடன் சிதம்பர தரிசனம் பெற்று தருமச் சாலை திரும்புகையில் வழியில் பயங்கர மழை. ஒதுங்குவதற்கு இடமில்லா பொட்டல்காடு. என்செய்வது எல்லோரும் மழையில் தெப்பமாக நனைந்து விட்டார்கள். ஆனால் அதிசயம் அவர்கள் கூடவே நடந்துவந்த மழையில் வந்த வள்ளல் பெருமான் மீது ஒருதுளி மழை கூட படவில்லை! பெருமான் அருகே மழைதுளி வந்ததுமே ஆவியாகி விட்டது?! அப்படியானால் வள்ளல் பெருமான்

உடல் எத்தகைய ஒளி மிகுந்தது உஷ்ணமாயிருந்தது?! உடன் வந்தவர்கள் வியந்து போற்றினர். எல்லோரிடமும் இந்த அற்புதக் காட்சியை கூறி மகிழ்ந்தனர்!!

வள்ளலாரை பலரும் வெள்ளாடைதுறவி, முக்காட்டுசாமி, சித்தர், ஞானி, கடவுளே அவதாரம் செய்துள்ளார் என பலவாராக போற்றி மகிழ்ந்தனர். இறைவன் ஜோதிமயமானவர் என்று கூறி, அகல் விளக்கேற்றி வைத்து வழிபட உபதேசித்தார். ஆரம்பத்தில் உருவத்தை தான் தியானிக்க வேண்டும் பின் அதுவே, உருவம் கரைந்து அருவமாகும் தொடர்ந்து தவம் செய்தால் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரை காணலாம் என்றார். சதா சர்வ காலமும் தெய்வ பாவனையை தீபத்தில் கொள்க என்றார்.

ஒரு சமயம் தருமச் சாலையிலே அன்பர்களோடு இருக்கையிலே, திடீரென, ஒருகாவியுடை சடைமுடிருத்திராட்ச பாணியாக துறவி ஒருவர் வள்ளலார் முன் தோன்றி ஒரு லட்டும் கொடுத்து சிறிதுநேரம் பேசிக்கொண்டிருந்தார்! பின் திடீரென மறைந்தும் போனார். பார்த்துக் கொண்டிருந்த அன்பர்கள் வியப்புமேலீட்டால் வள்ளலாரிடம் கேட்டபோது, அவர் எம்மை சந்தித்து அளவளாவ வந்த ஒரு சித்தர் என்றும் இந்நேரம் அவர் காசியிலேயிருப்பார் என்று கூற அன்பர்களுக்கோ மேலும் வியப்பு! பாம்பின் கால் பாம்பறியும்! வள்ளல் பெருமான் மகத்துவம் அறிந்து தரிசிக்க வந்தார் ஒருமாபெரும் சித்தர் பெருமான்!

தருமச்சாலையிலே வள்ளல் பெருமான் இருந்து புரிந்த அற்புதங்கள் எண்ணிலடங்காததாகும்! சன்மார்க்கிகளுக்கு கூட இருந்து பார்த்தவர்களுக்கு அதிசயம்! வியப்பு! அற்புதம்! பேரானந்தம்! களிப்பு! பரவசம்! கேட்பவர்களுக்கு கூட இது பேரானந்தம் தருகிறது என்றால் உடனிருந்தவர்கள் செய்த புண்ணியர் என்னென்பது? உத்தம சீடர்கள்! உண்மை பக்தர்கள்! வள்ளல்பெருமானே தெய்வம் என கொண்டாடியவர்களே! நல்லாரை காண்பதுவும் நன்றே நல்லார் சொல்கேட்பதுவும் நன்றே! நல்லாரோடு இணங்கி இருப்பதும் நன்றே! தருமச்சாலையில் நிகழ்ந்த மற்றொரு அற்புதம்! சிதம்பரத்திலே ஆனித் திருமஞ்சன விழா. அன்பர்கள் வள்ளலாரோடு போகலாம் என கருதியிருந்தார்கள். முன்பு சில முறை அப்படி போனதால் இம்முறையும் போக எண்ணினர். குறிப்பிட்ட நாளும் வந்தது. வள்ளலார் கிளம்பக் காணோம். நேரம் ஆகிக்கொண்டேயிருந்தது. அன்பர்கள் செய்வதறியாது திகைத்தனர். இம்முறை போகமுடியாமல் போய்விட்டதே என வருந்தினர். வள்ளலார் அவர்களின் எண்ணத்தை அறிந்து தருமச்சாலையினுள்ளே ஒரு திரைகட்டச் செய்து, அதில் பாருங்கள் என்றார்! என்ன அதிசயம்! சிதம்பரம் கோவிலில் நடந்த

அபிஷேக ஆராதனைகள் தெளிவாக திரையிலே எல்லோரும் கண்டு சேவித்தனர். இப்போது தானே சினிமா தொலைக்காட்சி எல்லாம் வந்துள்ளது. வள்ளல் பெருமான் கைகாட்டிய இடத்தில், எங்கோ சிதம்பரத்தில் நடந்தவைகளை வடலூர் தருமச் சாலையிலிருந்தபடியே சிதம்பரத்தில் நடராஜர் சந்நிதிமுன்னிருந்து பார்ப்பது போல் பார்த்தார்கள் என்றால் எவ்வளவு பெரிய மகா அதிசயம் இது!! பார்த்த அன்பர்கள் அடைந்த பேரானந்தத்திற்கு அளவேயில்லை!

தருமச்சாலைக்கு வெளியே உச்சிவேளையில் வெயிலில் அமர்ந்திருப்பார் நம் பெருமானார். அப்போது பார்த்த சிலர் பெருமான் தலையிலிருந்து மேலே சூரியன் வரை பெரிய அக்னிகம்பம் தோன்றியிருப்பதை கண்டு மெய்சிலிர்த்தனர்!

ஒரு சமயம் உச்சிப் போதில் பெருமானார் தருமச் சாலைக்கு வெளியே சென்றார். சிறிது நேரமாகியும் வராததால் அங்கிருந்த சண்முகம் பிள்ளை வெளியே வந்து பார்க்க பெருமானின் அங்கங்கள் கைவேறு கால்வேறு தலைவேறாக தனித்தனியாக வெட்டுண்டது போல் கிடக்க பார்த்து பதறி கத்தி மயங்கி வீழ்ந்தார். உடனே பெருமானார் அங்கமெல்லாம் ஒன்றாகி அவர் மயக்கம் தீர்த்து இனி இப்படி திடீரென வராதீர் எனக் கூறி இதுவும் ஒரு சாதனையே என்று கூறுவாராயினர். இது தான் நவகண்டயோகம் என்பர்!

சிலசமயம் தருமச்சாலை சமயலறையில் அன்பர்களை சொல்லி சுற்றி இரும்பு வாணலியில் நெருப்பு கங்குகளை போட்டு அதன் மத்தியில் அமர்ந்து தியானம் செய்வார். அவரே நெருப்புமயம். அவரை சுற்றிலும் அனல், இப்படி பலவிதமான கடுந்தவங்களையெல்லாம் செய்தார். இறைவன் நம் வள்ளல் பெருமானுக்கு அற்புத சித்திகள் எல்லாம் வாரி வாரி வழங்கினான்! “ஆடுறு சித்திகள் அனைத்தும் தந்தான்” என வள்ளலாரே கூறுகிறார்.

ஒருமுறை கடலூர் தேவநாதன் என்ற அன்பர் மகன் நோய்வாய்ப்பட்டான். வள்ளல் பெருமானை எண்ணி வணங்கினார். அச்சமயம் தருமச்சாலையில் அன்பர்களோடு வள்ளல் பெருமான் உரையாடிக் கொண்டிருந்தார். தேவநாதன் வேண்டிய அக்கணமே பெருமானார் அவர் வீடுசென்று மகனுக்கு விபூதி பூச நோய் குணமாயிற்று. வள்ளலார் போய்விட்டார். மறுநாள் குணமான தன் மகனுடன் வடலூர் வந்து அன்பர்களிடம் நடந்ததை கூற, தருமச்சாலையிலிருந்த அன்பர்களோ பெருமான் நேற்று முழுவதும் எங்களுடன் தான் இருந்தார் வெளியே எங்கும் போகவில்லை என்றதும், வள்ளல் பெருமான் ஒரேநேரத்தில் இரு இடங்களிலும் இருந்ததை கண்ட அன்பர்கள் ஆச்சரியமுற்றனர். அவர்களின்

வியப்புக்கு அளவேயில்லை! ஓடிவந்து காத்த அவர் கருணை உள்ளத்தை போற்றி புகழ்ந்தனர்! வணங்கி மகிழ்ந்தனர்!

இன்னொருமுறை பெருமானார் திருவதிகை வழிபாட்டுக்கு சென்றார். பெருமான் மகிமை அறிந்து பெருங்கூட்டம் கூடலாயிற்று. பெருமானை காணமுண்டியடித்து வந்தனர். ஆனால் பின் விழா கூட்டம் அமைதியானது! பார்த்தால் பல இடங்களிலும் வள்ளலார் தோன்றி மக்களுக்கு ஆசிவழங்கி அருள் பாலித்தார்! ஒரே நேரத்தில் பல உரு எடுக்கும் ஆற்றல் பெற்ற மாபெரும் சித்தர் பெருமானாகவும் விளங்கினார் வள்ளலார்!

சிலசமயம் வள்ளலார் தனியே உலாவவெளியே செல்வார். அன்பர்கள் அவரோடு தனியே பேச எண்ணி பின்செல்வார் ஆனால் அவர்கள் எவ்வளவு தூரம் நடந்தாலும் பெருமானார் முன்னே வெகு தொலைவில் போய்க் கொண்டிருப்பார். யாருமே அவரை நெருங்கமுடிவதில்லை!

சென்னைக்கு மரம் வாங்க ஆறுமுகமுதலியார் சென்றபோது தருமச்சாலையில் இருந்த பெருமானார் சென்னையிலும் அவருக்கு காட்சி கொடுத்து சத்திய ஞானசபைக்கு தோதான மரம் வாங்க அறிவுறுத்தினார்.

தருமச்சாலையில் ஒருநாள் இரவு உணவு அருந்தும் நேரத்தில் வெளியூரிலிருந்து 100 பேர் வந்து விட்டனர். சண்முகம் பிள்ளை பெருமானிடம் வந்து 10 பேர் உட்கொள்ளவே உணவு இருப்பதை தெரிவித்து ஒன்றும் புரியாமல் நின்றார். பெருமான் உடனே நீங்கள் போய் அனைவருக்கும் இலை போடுங்கள் நானே பரிமாறுகிறேன் என்றார். வள்ளல் பெருமான் தன்திருக்கரத்தால் அனைவருக்கும் உணவு பரிமாறினார். வள்ளல்பெருமான் எடுக்க எடுக்க அமுதசுரபிபோல உணவு வந்து கொண்டேயிருந்ததை கண்ட சண்முகம்பிள்ளை அதிசயத்து அப்படியே நின்று விட்டார்!

இன்னொருநாள் சண்முகம்பிள்ளை மறுநாள் சமைக்க அரிசி இல்லையே என்று வள்ளலாரிடம் கூற சரி, போம் நாளை வரும் என்றார்கள். மறுநாள் காலை வண்டி வண்டியாக அரிசி காய்கறிகள் தருமச் சாலைக்கு வந்தது. வந்தவர் நேற்றிரவு கனவில் பெருமான் தோன்றி விபரம் கூற கொண்டு வந்தேன் எனக் கூறிப் போனார்.

ஒருசமயம் கோடைகாலத்தில் மழையின்றி துன்புற்ற மக்கள் துயர்நீக்க பெருமானார் ஒரு செம்பு தண்ணீர் கொண்டுவந்து தம் காலில் ஊற்றும்படி கூறினார். அன்பர்கள் அவ்வாறு செய்த சற்று நேரத்தில் மேகங்கள் சூழ்ந்து பெரு மழைபெய்தது! மக்கள் மகிழ்ந்தனர். இதை அறிந்த புதுப்பேட்டை எனும் ஊர் மக்கள் திரண்டு

வந்து தங்கள் ஊர் ஏரிகிணறு குளம் எல்லாம் வற்றி பஞ்சம் நிலவுகிறது நீங்கள் தான் காக்கவேண்டும் என கதறினர். வள்ளல் பெருமான் ஆறுகுடம் தண்ணீரை தன் தலையில் விடச்சொன்னார். அவ்வாறே செய்ததும் புதுப்பேட்டையிலும் பெருமழை ஆறு கிணறு நீர் நிலைகள் நிரம்பின ஊரே செழித்தது. மக்கள் மகிழ்ந்து வள்ளல் பெருமானை போற்றி துதித்தனர்.

ஒரு சமயம் அன்பர் ஒருவருடன் மாட்டு வண்டியில் அவர் ஊருக்கு போகும்வழியில் கள்வர் இருவர் வண்டியை மறித்தனர். அன்பர் மோதிரத்தை கழற்ற முற்பட்டபோது பெருமான் வெளியிறங்கி அவசரமோ எனகேட்க கள்வர் அடிக்க தடியை ஓங்கினர். வள்ளலார் பார்த்தார். ஓங்கிய கை அசைவற்று நின்றுவிட்டது. கண் பார்வையும் கள்வர்கள் இழந்தனர். வந்திருப்பது சாதாரணஆள் அல்ல என்றுணர்ந்த கள்வர்கள் கதறி தங்களை காப்பாற்றும்படி கெஞ்சினர். மனமிரங்கிய வள்ளல் அவர்களை மன்னிக்க "பிச்" என்றார். கள்வர்கள் முன் போல் சரியாயினர். வள்ளலாரை வண்டியோடு சுற்றிவந்து வணங்கி மன்னிப்பு கேட்டு போயினர்.

வள்ளல் பெருமான் பார்த்தாலே போதும் புலால் உண்பவன் புலாலை மறப்பான் மறுப்பான்! தீய எண்ணமுடையவர்களும் வள்ளலை தரிசித்ததால் நல்லவர்களாயினர்.

ஒரு சமயம், பல காலமும் ரசவாதம் கற்றுத்தருக என சதா தொந்தரவு செய்த அன்பரிடம் வடலூரில் கீழேயிருந்து ஒரு பிடி மண் எடுக்கச் சொல்லி தன் கையில் வாங்கி மூடிக் கொண்டு அவர்கையை காட்டச்சொல்லி கொட்டினார். என்ன ஆச்சரியம் மணல் அனைத்தும் தங்க பொடியாயிருந்தது! உடனே வள்ளலார் அவனிடம், "பற்றற்ற ஞானி கைபட்டமண்ணும் பொன்னாகும்" இதற்காக காலத்தை வீணடிக்காதே! அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரை அடையும் வழியை பாரு! அவர் அருள் கிட்டினால் நீ தொட்டதெல்லாம் பொன்னாகும் என்று நல்ல புத்தி சொல்லி அனுப்பினார்.

வள்ளல் பெருமான் பலர் நோயை மருந்துகள் கொடுத்து குணப்படுத்தினார். சித்த மருத்துவத்திலும் தேர்ந்தவர் ரசவாதத்திலும் தேர்ந்தவர். வள்ளல்பெருமானை எல்லா தரப்பு ஆட்களும் காண வந்தனர். அருள்வேண்டி வந்தவர் பொருள் வேண்டிவந்தவர், பொன் செய்ய வேண்டி வந்தவர், நோய் தீர நாடி வந்தவர், சித்த மருத்துவம் படிக்க வந்தவர், வேதபுராணம் இலக்கியம் படிக்க வந்தவர் இன்னும் பல வேண்டுகோள்களோடு வந்தவர் பலர். எல்லோருக்கும் எல்லாம் வழங்கினார் வள்ளலார். நாடி வந்தோரெல்லாம் நல்லருள் பெற்றனர்.

வேட்டவலம் எனும் ஊர் ஜமீன்தாருக்கு இரு மனைவிகள். ஒருத்திக்கு மகோதரம் நோய். மற்றொருத்தியை பிரம்மரட்சஸ் பிடித்திருந்தது. வள்ளல் பெருமான் அவர் மாளிகை போனார். வீட்டு வாசலில் கால் வைத்ததும் பிரம்மரட்சஸ் ஓடிவிட்டது! அடுத்த மனைவிக்கு விபூதிகொடுக்க அவரும் குணமானார்! வள்ளலார் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினார். வள்ளல்பெருமான் வேண்டுகோள்படி அவர் ஜமீனுக்குட்பட்ட எந்த கோவிலிலும் உயிர்பலி கொடுப்பதை தடை செய்தார்!

அப்போதைய சங்கராச்சாரியார் வள்ளலாரை வாதில்வெல்ல வந்தார். வடமொழியே தேவபாஷை மொழிகளுக்கெல்லாம் தாய் என்று வாதிட்டார்! வள்ளல் பெருமான் அமைதியாக கேட்டுக்கொண்டிருந்தார்! அவர் கருத்தை சரி என ஆமோதித்தார்! சுற்றி இருந்தவர்கள் இரண்டு பெரியவர்கள் வாதிடுகிறார்கள், நமக்கு செவிக்கு நல்ல விருந்து கிடைக்கும் என எண்ணி இருந்தவர்கள் அமைதியாயினர்! மொழிகளுக்கெல்லாம் தாய் வடமொழியே - சமஸ்கிருதமே சரிதான் நானும் ஒப்புக்கொள்கிறேன் என்று நிறுத்திய வள்ளலார், ஆனால் ஒரு பெண் எப்போது தாய் ஆவாள்? தந்தையாக ஒருவன் வந்தபின் தானே! தந்தைமொழி தமிழ்!? என்று கூறவும் அன்பர்கள் ஆர்ப்பரித்தனர். தகுந்த விளக்கம் கொடுத்து தமிழின் தொன்மையை பெருமையை பறைசாற்றினார்கள்! பிறமொழிகளின் ஆதிக்கத்திலிருந்து விடுவித்து தமிழின் தனித்தன்மையை தரணிக்கு எடுத்துரைத்தவர் நம் வள்ளல் பெருமானே!!

தம்மில் அமிழ்ந்து இருப்பதால் இது "தமிழ்" என்று இலக்கண இலக்கியங்களை ஆதாரமாக காட்டி தமிழின் பெருமையை பாரறியச் செய்தவர் வள்ளலார்!!

வள்ளலாரின் பெரும்புகழ் பட்டிதொட்டியெங்கும் பரவலாயிற்று! இறைவன் சந்நிதியிலே வள்ளலாரின் பாடல்கள் எல்லோராலும் பாடப்பட்டது! வள்ளலாரின் மகத்துவம் அறியாத அறிவிலிகள் அவர் மேல் பொறாமைப்பட்டனர். தூற்றினர். வள்ளலாரின் பாடல்களையும் பழித்துரைத்தனர். சமயவாதிகள் வெறுப்பால் பொறாமையால் புழுங்கினர். அவர்களுக்கு பழியேற்க வந்து சேர்ந்தார் யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலர். சைவசமய பற்றுள்ளவர், வள்ளலார் பாடல்கள் சரியில்லை என நீதி மன்றத்தில் வழக்கு தொடுத்தார். அந்தோ பரிதாபம் ஆறுமுகநாவலர் பாடு.

குறிப்பிட்ட நாளில் எல்லோரும் நீதிமன்றம் வந்தனர். வள்ளலாரை கூப்பிட அவர் உள்ளே வர அங்கு அமர்ந்திருந்த அனைவரும் எழுந்து நின்று கைகூப்பி வள்ளலாரை வணங்கினர். வழக்குதொடுத்த ஆறுமுக நாவலரும் எழுந்து வள்ளலாரை வணங்கினார்.

இதையெல்லாம் பார்த்த நீதிபதி தன்னையறியாமலே எழுந்து வணங்கினார். பின்னர் நீதிபதி ஆறுமுக நாவலரைப் பார்த்து, யார்மீது பழிசுமத்தி வழக்கு தொடுத்தீரோ அவர் வந்ததும் ஏன் எழுந்து வணங்கினீர் என்றார்?! அதற்கு யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலர் வள்ளலார் ஒரு தூய்மையான இறையடியார் அதனால் வணங்கினேன் என்றார். உடனே நீதிபதி வள்ளலார் தூய்மையான இறையடியார் என்று நீரே கூறுகிறீர். வணங்குகிறீர் பின் எப்படி அவர் பாடியது தவறாக இருக்கும். உமது வழக்கை தள்ளுபடி செய்கிறேன் என கூறிவிட்டார்.

இறைவன் திருஅருளால் பாடப்பட்ட அருள்பாக்கள் அல்லவா இராமலிங்கம் சிறுவனாயிருக்கும் போதே பாடியது! திருஅருள் பாடல்கள் தான் வள்ளலார் பாடிய அனைத்தும் என உலகே போற்றியது! இராமலிங்கம் பாடிய பாடல் தொகுதி அன்பர்களால் "திருஅருட்பா" என 6000-க்கும் மேற்பட்ட பாடல்கள் ஆறு தொகுதிகளாக பகுத்து வெளியிடப்பட்டது! நாம் செய்த புண்ணியம்! வள்ளலார் தமிழ் நாட்டிலே பிறந்தது! அதனால் தானே "திரு அருட்பா" கிட்டிற்று!!

"சுத்தஞானியை தூஷணம் செய்தேனோ" என்று வள்ளல் பெருமான் மனுமுறை கண்ட வாசகத்தில் கூறுகிறார்? சுத்த ஞானி பிரம்மஞானி சித்தருக்கெல்லாம் சித்தர் திருவருட்பிரகாச வள்ளலாரை தூஷித்ததால் யாழ்ப்பாணம் ஆறுமுகநாவலர் பின்னாளில் உடலெல்லாம் புண்ணாகி மிகுந்த அவஸ்தைப் பட்டு செத்தார்! இறையருள் பெற்ற மாபெரும் ஞானியை தூற்றினதற்கு ஆண்டவன் எனக்கு கொடுத்த தண்டனை இது என கடைசி காலத்தில் யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலர் வருந்தி அழுதாராம்!! சைவ மட அதிபதிகள் பேச்சை கேட்டு அவர் செய்த தவறு!

இப்பேர்ப்பட்ட வள்ளல் இராமலிங்கத்தை அன்பர்கள் சுவாமிகள் ஞானி மகான் என்று அழைத்ததோடு நில்லாமல் திருவாகிய இறைவன் அருளை பரிபூரணமாக பெற்று ஒளிபொருந்தி பிரகாசமாக திகழ்வதோடு உலகமே சாகாநிலை - மரணமிலாபெருவாழ்வு பெறவேண்டும் என்பதற்காக சாகாக்கல்வியை - உலகருக்கு அருளை வாரி வாரி வழங்கியவள்ளல் என்பதால் "திரு அருள் பிரகாச வள்ளலார்" என்று அன்போடு மிகுந்த மரியாதையோடு அழைக்கலாயினர்! இந்த பட்டத்துக்கு பொருத்தமானவர் இராமலிங்கமே!

ஆனால் அன்பர்கள் இப்படியெல்லாம் புகழ்வதை இராமலிங்கர் விரும்பவில்லை! புகழ்ச்சிக்கு அடிமையாகாத பூரண ஞானியல்லவா வள்ளலார்! ஒரு சமயம் அன்பர் ஒருவர் பக்தி மிகுதியால் வள்ளலார் போல ஒரு மண் பொம்மையை செய்து எடுத்து வந்தார். அவர்,

வள்ளலார் நம்மை பாராட்டுவார் என நினைத்தார். அதை வாங்கிய வள்ளலாரோ அதை கீழே போட்டு உடைத்தார்! மண்ணுக்கு போகாமல் இம்மனித உடலை பொன்னாக்கிட ஒளியாக்கிட பாடுபடுகிறேன்! மண்ணாக்கி கொண்டு வந்திருக்கிறாயே என அந்த அன்பரை கடிந்து கொண்டார். மேலும் எல்லாம் வல்ல அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரை அடைய வழிகாட்டுகிறேனே அதை புரிந்து சாதனை செய்யாமல், சொன்ன என்னை போற்றி கடவுளாக்குகிறீர்களே என்று மிகவும் வேதனைப்பட்டார்!!

எல்லாம் வல்ல அருட்பெருஞ்ஜோதி அற்புத கடவுளையே தொழுவீர்! சிறுதெய்வ வழிபாடு கூடவே கூடாது! ஒழுக்கமாக வாழுங்கள் என நித்திய கரும விதியை உபதேசித்தார்! சித்தி பெறுவதற்காக தவம் செய்து உங்கள் வாழ்வை வீணடிக்காதீர்கள்! முக்திபெற எடுத்த தேகம் இது என உணர்ந்து முகத்தில் இரு கண்களில் துலங்கும் சூரியன் தீயையும் சந்திரன் தீயையும் இரு கண்ணும் உள்சேரும் இடமான கடைக்கண்ணான மூன்றாவது தீ ஆன அக்னியையும் இணைப்பதே ஞான தவம்! அந்த தவம் செய்து ஒளியுடல் பெறுங்கள்! இருகண்களையும் விழித்திருந்து விழிப்புணர்வுடன் இருந்து தவம் செய்! அதற்கு தகுந்த ஆச்சாரியர் மூலம் உன் நடுக்கண்ணை திறக்கப்பெற்றுக்கொள்ளுதல் நலம்! என திருவருட்பிரகாச வள்ளலார் ஞானம் பெறும் வழியாக விழியை கூறியருள்கிறார்!!

வள்ளல் பெருமானின் அணுக்கத் தொண்டர் இறுக்கம் இரத்தினசாமி முதலியார் வள்ளலாரின் பாடல்கள் தொகுப்பை வெளியிட திருவருட்பா என வெளியிட 1860 ஆண்டு முதல் ஏழு ஆண்டுகள் போராடினார்! விடவில்லை, தினமும் ஒரு வேளையே உண்டு அறப்போராட்டம் நடத்தி வள்ளலார் மனதை கரைய வைத்து அனுமதி வாங்கிவிட்டார்! 1867-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் வெளிவந்த திருஅருட்பா முதல் நான்கு திருமுறைகள் பதிப்பின் முகப்பேட்டில் முதல் முதலாகத் திருவருட்பிரகாச வள்ளலாரென்னும் சிதம்பரம் இராமலிங்க பிள்ளை அவர்கள் திருவாய் மலர்ந்தருளிய "திருவருட்பா" என அச்சிடப்பெற்றது. இந்த உலகமே முதலில் நன்றி சொல்ல வேண்டியது இறுக்கம் இரத்தினமுதலியாருக்கே!! அவர்தானே ஏழு ஆண்டுகள் விடாமல் நச்சரித்து போராடி அருட்பா வெளியிட வள்ளலார் அனுமதிபெற்றுத் தந்தார்!

இராமலிங்கம் அருளிய பாடல்களுக்கு "திரு அருட்பா" என்றும், அதன் பகுதிகளை ஆறாக வகுத்து அவற்றை ஆறு திருமுறை என்றும், நமது இராமலிங்க பெருமானுக்கு "திருவருட்பிரகாச வள்ளலார்" என்றும் சிறப்பு பட்டம் வழங்கிய பெருமையும்

புண்ணியமும் உபயகலாநிதிப் பெரும்புலவர் தொழுவூர் வேலாயுத முதலியார் அவர்களையே சாரும்!

1867-ல் திருவருட்பா முதல் நான்கு திருமுறைகள் முதலில் இறுக்கம் இரத்தின முதலியாரால் வெளியிடப்பட்டது.

1883-ல் திருவருட்பா முதல் நான்கு திருமுறைகள் இரண்டாம் பதிப்பு தொழுவூர் வேலாயுத முதலியார் வெளியிட்டார்.

1880-ல் திருவருட்பா ஐந்தாம் திருமுறை முதலில் தொழுவூர் வேலாயுத முதலியார் வெளியிட்டார்.

1887-ல் திருவருட்பா ஐந்தாம் திருமுறை இரண்டாம் பதிப்பும் தொழுவூர் வேலாயுத முதலியாரே வெளியிட்டார்.

திருவருட்பா ஆறாம் திருமுறையை தற்போது வெளியிட வேண்டாம் என வள்ளல்பெருமானே கேட்டுக்கொண்டார்.

திருவருட்பா ஆறாம் திருமுறை முதல் பதிப்பு 1885-ல் வேலூர் பத்மநாபர் பெங்களூர் இராகவலு ஆகிய இருவர் முயற்சியால் திருச்சி ம. லோகநாதர் என்பவர் வெளியிட்டார்.

திருவருட்பா மூல ஏடுகளை நன்கு ஆராய்ந்து பிழையின்றிச் செம்மையாகச் சென்னை முன்னாள் இந்து சமய அறநிலைய ஆணையர் ஆ. பாலகிருஷ்ணபிள்ளை 12 புத்தகங்களாக வெளியிட்டார்!

சன்மார்க்க அறிஞர் ஊரன் அடிகள் வரலாற்று முறைப்பதிப்பாக 24-05-1972-ல் ஆறு திருமுறைகளையும் சேர்த்து வெளியிட்டார்.

தற்போது வடலூர் வள்ளலார் தெய்வ நிலையம் திருவருட்பா ஆறுதிருமுறைகளையும் இரு பகுதிகளாக மலிவுவிலையில் வெளியிட்டுள்ளனர். உரைநடை பகுதி தனி நூலாகவும் வெளியிட்டுள்ளனர்.

நான்காண்டுகள் வடலூர் தருமச்சாலையில் அருளாட்சி புரிந்த திருவருட்பிரகாச வள்ளலார் அடுத்த நான்கு ஆண்டுகள் 1870 முதல் 1874 வரை சித்திபெறும் வரை ஒளியுடலானது வரை வடலூருக்கு தெற்கே 5 கி.மீ. தொலைவிலுள்ள மேட்டுக்குப்பத்துக்கு சென்றார்கள். அங்கே பெருமான் தங்கிய திருமாளிகைக்கு சித்திவளாகம் என வள்ளலாரே பெயரிட்டார்! 30-01-1874 வெள்ளிக்கிழமை இரவு 12 மணிக்கு அருட் பெருஞ்ஜோதி ஆண்டவரோடு ஒளியாகி ஐக்கியமானதும் இந்த சித்திவளாகத்தில் தான்!

திருவருட்பிரகாச வள்ளலார் இராமலிங்க சுவாமிகள் பல்லாண்டுகளாக பல்வேறு உபதேசங்கள் வாயிலாகவும், ஆறாயிரத்துக்கும் மேற்பட்ட பாடல்கள் மூலமாகவும் மரணமிலா பெரு வாழ்வுக்கு வழிகாட்டினார்கள்!! அப்போதும் வள்ளலார் திருப்தியடையவில்லை! உலகுக்கு ஞானத்தை இன்னும் எப்படி சொல்லலாம் தெளிவுபடுத்தலாம் என்று சிந்தித்தார். அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரே வழிகாட்டினார்! உலகுக்கு வள்ளலார் வழங்கிய அருட்கொடை "சத்திய ஞான சபை" உதயமானது!

இதுவரை இவ்வுலகில் திருவாசகம் தந்த மாணிக்கவாசகர் பெருமான் திருப்பெருந்துறையிலே கட்டிய ஆவுடையார் கோவில் தான் மிகப்பெரும் ஞானவிளக்கமாய் இருந்தது. கருவறையிலே ஆவடை மட்டுமே!? இறைவன் உருவங்கடந்த நிலையிலே ஒலிஒளியாக திகழ்கிறான் என்பதால் லிங்கம் ஸ்தாபிக்கவில்லை?! பீடம் மட்டுமே இருக்கிறது. இதன் உண்மை உணராத மூடர்கள் லிங்கத்தை கொண்டு வைத்தனர். ஆவடை மட்டுமே பீடம் மட்டுமே உள்ளதால் தான் அக்கோவில் ஆவுடையார் கோவில் ஆனது ஊர்பெயரும் ஆவுடையார் கோயிலே! இன்றும் ஆவுடையார் கோவிலிலே திருவிழா மாணிக்கவாசகருக்கே!

மாணிக்கவாசகரை தெய்வமாகவே போற்றிய வள்ளலார் அவர் ஆசியோடு, அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் அருளோடு உலகருக்கு வழங்கிய ஞானதானமே "சத்திய ஞான சபை". 25-01-1872 பிரஜோற்பத்தி வருடம் தை மாதம் 13-ம் நாள் வியாழக்கிழமை பூச நட்சத்திரத்தன்று முதன்முதலாக சத்திய ஞானசபையில் வழிபாடு தொடங்கப்பெற்றது. நாம் செய்த தவப்பயன் திருவருட்பிரகாச வள்ளல் இராமலிங்க சுவாமிகள் தமிழ்நாட்டில் வடலூரில் சத்திய ஞான சபையை உருவாக்கியது!! ஒரு ஆண்டாக தானே முன்னின்று சபையை உருவாக்கினார். "சத்திய ஞான சபையை என்னுட் கண்டனன் சன்மார்க்க சித்தியை நான் பெற்றுக் கொண்டனன்" என்று பாடுகிறார்! நம் தலையின் அமைப்புதான் சத்திய ஞானசபை! உள்ளே நடுவே சுடர்விட்டு பிரகாசிக்கும் அருட்பெருஞ்ஜோதி! முன் இருபுறமும் சிற்சபை பொற்சபை! வள்ளல்பெருமான் சத்திய ஞான சபை இயற்கை விளக்கம் என்பார்! நம் அகத்தே தலையின் உள் நடுவே விளங்கும் நம் ஆத்மஜோதியை காணுதற்குரிய அனுபவத்தைப் புறத்தே அடையாளமாகக் காட்டுவதே சத்திய ஞானசபை!! நாம் ஜோதி தரிசனம் காண முடியாமல் அசுத்த மாயா திரைகள் ஏழு மறைத்துள்ளது! வடலூரில் சத்தியஞானசபையில் ஏழு திரை நீக்கிய பின் தானே ஜோதிதரிசனம் காண்கிறோம்? அதுபோல நம் கண்களை மறைத்துக் கொண்டிருக்கும் மும்மலங்களாகிய ஆணவம் கன்மம் மாயை ஏழு நிலைகளாக ஏழு திரைகளாக உள்ளது! நாம் சிற்சபை

பொற்சபையாகிய நம் இரு கண்மணி ஒளியை நினைந்து உணர்ந்து நெகிழ்ந்து தவம் செய்யச் செய்ய இருகண் சூரியசந்திர ஜோதி உட்புகுந்து ஆத்மஜோதியை அடையும் அம்முயற்சியின் போது ஒவ்வொரு திரையாக விலகும்! என்னென்ன கலர் ஒளி தெரியும் என்றும் நம் உலககுரு வள்ளலார் தெளிவாக கூறுகிறார்! முடிவில் நம் ஆத்மஜோதி தரிசனம் நாமே காணலாம்!! ஒவ்வொரு மனிதனும் இப்படித்தான் ஞான தவம் செய்யணும்! இன்னின்ன மாதிரி அனுபவம் கிட்டும் என வள்ளல் பெருமான்மிகமிக தெளிவாக ஞான அனுபவங்களை புட்டு புட்டு வைக்கிறார்! "சிற்சபையும் பொற்சபையும் சொந்தமெனதாச்சு" என்றும் அகவலில் ஒவ்வொரு திரையின் தன்மையும் கூறி நம்மை பரவசத்திலாழ்த்துகிறார்!

உலகில் இதுவரை இதுபோல் யாருமே இவ்வளவு தெளிவாக ஞான உபதேசம் சொன்னதில்லை!! அதை பாமரனுக்கும் விளங்கும்படி உன் தலை அமைப்பே சத்திய ஞானசபை, அதன் உள் நடுவே ஜோதி தரிசனம் காண்பதை போல உன்தலை உள்நடுவே உள்ள உன் ஆத்மஜோதியை காண்! என்றார்! இதுவே ஈடு இணையில்லா ஒப்பற்ற ஞானம்! முதன் முதலாக உலகுக்கு சொன்னதோடு இம்மாதிரி இருக்கும் என்று சத்தியஞான சபையையும் கட்டி தத்துவ விளக்கமும் தந்து நம்மை மரணமிலா பெருவாழ்வுக்கு கூட்டிப்போகிறார். யார் செய்வார் இப்படி ஒரு உதவியை?! ஞானிக்கெல்லாம் பரமஞானி வள்ளலார்! ஈடுஇணையில்லா ஞானி!!

"என்செயல் அனைத்தும் தன்செயல் ஆக்கி
என்னைவாழ் விக்கின்ற பதியைப்
பொன்செயல் வகையை உணர்த்திஎன் உளத்தே
பொருந்திய மருந்தையென் பொருளே
வன்செயல் அகற்றி உலகெலாம் விளங்க
வைத்தசன் மார்க்கசற் குருவைக்
கொன்செயல் ஒழித்த சத்திய ஞானக்
கோயிலில் கண்டுகொண் டேனே"

6-ம் திருமுறை - திருவருட்பா

இதுதான் ஞானம்! இதுதான் வழி! இதைத்தான் எல்லா ஞானிகளும் இரகசியமாக மறைபொருளாக இதுகாறும் சொல்லிபட்டும் படாமலும் ஞானத்தை வெளிப்படுத்தி சென்றனர்! ஆனால் வள்ளலார் உலககுரு ஆயிற்றே! உலகருக்கு உள்ளதை உள்ளபடி உரைத்தார்! எந்த மறைப்புமின்றி! பட்டவர்த்தனமாக இரகசியம் ஏதுமின்றி இதுதான் இப்படித்தான் என்று போட்டுடைத்துவிட்டார்! காலங்காலமாக உலகை சூழ்ந்த அஞ்ஞான இருள் விலகியது! உலக குரு வள்ளலார் ஏற்றிய ஞானதீபம் பிரகாசிக்கின்றது!!

சன்மார்க்கம் தருமச்சாலையில் அல்ல?! சத்திய ஞான சபையிலேதான்! சாகாதவனே சன்மார்க்கி! சாப்பிட்டுக்கொண்டிருப்பவன் சன்மார்க்கி அல்ல! உண்மையான சன்மார்க்கியே பசித்திரு தனித்திரு விழித்திரு! வள்ளலாரைப் போல் வேஷம் போடாதே! வள்ளலார் சொன்னபடி விழித்திருந்து ஞானதவம் செய்!

உலககுரு வள்ளலாரின் கொள்கைகள் ஆன்மநேய ஒருமைப்பாடும் ஜீவகாருண்யமுமே!! எவ்வுயிரையும் தம்முயிர்போல் கருதினாலே ஆன்மநேய ஒருமைப்பாடு உனக்குள் உண்டாகும்! பிற உயிரைப்போல உன் உயிரும் ஜீவனும் கடைத்தேறவேண்டுமானால் உன் ஜீவனை கருணையோடுபார் அதுவே ஜீவகாருண்யம்! சாப்பாடு போடுவது, யார் யாருக்கு என்ன தேவையோ அதை கொடுத்து உதவுவது எல்லாமே சாதாரண விஷயம்!? உலககுரு வள்ளலார், நீ உன் ஜீவனை அறிந்து உணர்ந்து ஞானதவம் செய்து அருட்பெருஞ்ஜோதி ஆண்டவனை அடையவே வழிகாட்டினார்! விழிகாட்டி விழித்திருக்க சொன்னார்! கண்ணை மூடி செய்யும் எந்த பயிற்சியும் ஞானத்தை தராது!? முதலில் புறக் கண்ணைதிற புறத்தே ஜோதி தரிசனம் காண்அதேபோல் விழித்து தான் உன் அகத்திலும் ஆத்மஜோதியை காணணும்!! கண்ணை மூடினால் தூங்குவாய், முடிவில் ஒரேயடியாய் நெடுந்தூக்கம்தான் முதலில் புறக்கண்ணைத்திற! உன் அறிவு கண்ணைத்திற! உன் மனக்கண்ணைத்திற! பின்னர் உன் ஊனக் கண்ணே ஞானக் கண்ணாக ஒளிரும்!!

விபூதி பூசுங்கள்! தலை நீர் போகும்! விபூதி பூசாதவனுக்கு ஒன்றும் ஞானம் வராது! வள்ளல்பெருமான் எத்தனையோ அன்பர்களுக்கு விபூதி கொடுத்தே தீராத பிணி மற்றும் துன்பங்களை போக்கியிருக்கிறார்! படிக்கவில்லையா?! "மந்திரமாவது நீறு" என திருஞான சம்பந்தர் பாடல் பாடியிருக்கிறாரே தெரியாதா உங்களுக்கு? தருமச் சாலையிலே, மேட்டுக்குப்பத்திலே பின் எதற்கு விபூதி கொடுக்கிறார்கள்?! வீண்வாதம் விதண்டாவாதம் பண்ணாமல் வள்ளலார் வழியில் ஒளியுடலாகி மரணமிலா பெருவாழ்வடையும் வழியை தேடு!

சாப்பாடு போடுங்கள் நல்லது! இன்னும் என்னென்ன உதவியெல்லாம் உலகருக்கு செய்ய முடியுமோ செய்யுங்கள்! ரெம்ப நல்லது புண்ணியம் கிடைக்கும்! இதெல்லாம் இன்றைய உலகில் எத்தனையோ ஸ்தாபனம் செய்கிறதே?! தெரியாதா! சன்மார்க்கத்தின் சிறப்பு என்னது? மற்றெல்லாரிடமிருந்தும் உலககுரு வள்ளலார் எவ்வாறு வேறுபட்டு உன்னத நிலைபெற்று திகழ்கிறார்?! சன்மார்க்கி என்று சொல்லும் ஒவ்வொருவரும் இதை உணர வேண்டும்!!

வள்ளலாரின் ஒரே இலட்சியம் இதுதான், “வம்மின் உலகியலீர் மரணமிலா பெருவாழ்வில் வாழ்ந்திடலாம்” என்பதல்லவா?! தும்பை விட்டு வாலை பிடித்த கதையாக, சாகாக்கல்வியை படிக்கணும் பிறருக்கு போதிக்கணும் சாகாநிலை பெறணும் இதை செய்வதை விடுத்து வேறு எல்லாவற்றையும் செய்கிறீர்கள்?! இந்த வேதனை வள்ளலார் இருக்கும் போதே அனுபவித்தார்! அறியாமையில் உழலும் இந்த மக்களுக்கு நல்லறிவை கொடு என்று அதையும் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரிடமே முறையிட்டார்!

புலை கொலை தவிர்த்தவரே உள்ளே புகுதல் வேண்டும் என்று சத்திய ஞான சபை வாசலில் வள்ளல் பெருமானே கல்வெட்டில் பதித்து வைத்துள்ளார்! ஒருமுறை ஈ.வெ.ரா. பெரியார் வடலூர் வந்தபோது வாசலில் இருந்த இந்த வாசகத்தை பார்த்து விட்டு உள்ளே போகவேயில்லை! நான் வள்ளலாரை மதிக்கிறேன் என்று கூறி அவரை வெளியில் இருந்தே வணங்கி போனார்! நாத்திகரேயானாலும் அவர் பெரியவரே!

புலை கொலை தவிர்த்தவரே வள்ளலார் பெயர் சொல்ல அருகதை உள்ளவராவார்! சன்மார்க்கி என்று சொல்வோர் சன்மார்க்க சங்கம் நடத்துவோர் முதலில் புலை கொலை தவிர்க்க வேண்டும்! கண்டிப்பாக பஞ்சமாபாதகங்கள் புரியக்கூடாது! ஒழுக்க சீலர்களாய் விளங்க வேண்டும்! நல்ல பண்பு அன்பு பணிவு அவசியம் இருக்க வேண்டும்! வயிற்றுக்கு பசிக்கு இரைதேட எடுக்கும் முயற்சியில் சிறிதளவாவது ஆன்ம பசிக்கு இறையை தேடுவதில் காட்டு!! உருப்படுவாய்!!

“இறைவனை காண வேண்டுமென உண்மையாக விரும்பினால் அழுத கண்ணீர் மாறுமா ஆகாரத்தில் இச்சை செல்லுமா!” என்று உலககுரு வள்ளலார் கூறுகிறார். சதா சர்வ காலமும் நினைந்து நினைந்து உணர்ந்து உணர்ந்து இருந்தால் நெகிழ்ந்து நெகிழ்ந்து கண்ணீர் பெருகி வழியும். இதுவே தவம்! கண்மணி ஒளியை நினைந்து குருதீட்சைமூலம் உணர்ந்து ஞான தவம் செய்தால் நெகிழ்ச்சி ஏற்படும் கண்ணீர் பெருகும். இங்ஙனம் எப்போதும் தவம் செய்து கொண்டேயிருந்தால் அதாவது எப்போதும் அழுது கொண்டேயிருந்தால் சாப்பிட தோன்றுமா?! வள்ளலார் எதை சொன்னார் என இப்போதாவது புரிகிறதா? சாப்பாட்டிலே கவனம் வைக்காதே அழுது தொழுது இறைவனை அடையும் வழியை பார்! அழுதால் பெறலாம் அவனருளை என திருநாவுக் கரசரும் ஞான தவநிலையையே கூறுகிறார். அழுகிணி சித்தர் என்று ஒருவர். ஏன் அந்த பெயர் வந்தது? எப்போதும் அழுது கொண்டேயிருப்பாராம்! அதனால் அவர் பெயரே அழுகிணி சித்தர் என்றாயிற்று!

புலால் உண்பதை கண்டித்த அளவுக்கு வள்ளலார் வேறெதையும் கண்டித்ததில்லை. புலால் மறுத்தலை வற்புறுத்திய அளவுக்கு வேறெதையும் வற்புறுத்தியதில்லை! சாதி மதம் இனம் மொழி இவற்றால் உலகமே பிரிந்து கிடந்தாலும் வள்ளலார் ஆன்ம நேய ஒருமைப்பாடு உணர்வுடனேயே அனைவரையும் சமமாகவே கருதினார்! ஆனால் புலையொழுக்கம் ஒன்றை வைத்தே உலகரை இரு பிரிவாக பிரித்தார்! புலால் மறுத்தோர் அகவினத்தார் அவர் இறைவனருளை பெறுவர்! புலால் உண்போர் புறவினத்தார் ஒருக்காலும் அவர்களுக்கு இறையருள் கிட்டாது! "உயிர்கொலையும் புலைப்புசிப்பும் உடையவர்கள் எல்லாம் உறவினத்தார் அல்லர், அவர் புறஇனத்தார்!" என இறைவனே தனக்கு அருளினான் என உலககுரு வள்ளலார் கூறியருள்கிறார்!

"மருவாணைப் பெண்ணாக்கி ஒருகணத்தில் கண்விழித்து
வயங்கும் அப்பெண்
உருவாணை உருவாக்கி இறந்தவரை எழுப்புகின்ற உறுவனேனும்
கருவாணை யுறஇரங்கா துயிருடம்பைக் கடிந்துண்ணுங் கருத்தனேல்அங்
குருவாணை எமதுசிவக் கொழுந்தாணை ஞானிஎனக் கூறொ ணாதே"
2-ம் திருமுறை - திருவருட்பா

ஒருவன் ஆணை பெண்ணாகவும் பெண்ணை ஆணாகவும், இறந்தவரை எழுப்பவும் வல்லவனாயினும் அவன் புலால் உண்ணும் கருத்துடையவனாயின் அவன் ஞானியல்ல!? புலால் உண்பவனல்ல அந்த கருத்துடையவானாயினும் அவன்ஞானியல்ல கேவலம் மனித மிருகமே!? இது என் குருமீது ஆணை சிவத்தின் மீதும் ஆணை என்று அறுதியிட்டு கூறுகிறார் வள்ளலார்!

சன்மார்க்க சங்கத்தார் கண்டிப்பாக அகவினத்தாராகவே இருக்க வேண்டும்! புறவினத்தார் கண்டிப்பாக வடலூர் திசை பக்கமே வராதீர்கள்!

பிறக்கும் போதும் நிர்வாணம். இறக்கும் போதும் முடிவில் நிர்வாணமே. எங்கிருந்து வந்தது ஜாதி மதம் இனம் மொழி முதலிய வேறுபாடுகள்?!

உலக மக்கள் அனைவருக்கும் ஒரே குலம் மனித குலம்! நமக்குள் இரண்டே பிரிவு ஆண்பெண்! உலகுக்கு ஒருவனாம் இறைவன் அவனே நமக்கு தாயும் தந்தையுமாவான்!

பல ஞானிகளும் மகா நிர்வாணநிலை பெற வேண்டும் என்றனர்! அதாவது எந்த பற்றுமின்றி இறைவனை மட்டுமே மனதில்கொண்டு வாழ்வதே மகா நிர்வாணநிலை! சுகப்பிரம்ம மகரிஷியை போல சதாசிவ பிரம்மேந்திரர்போல வாழவேண்டும்! ஆடைகளை மட்டும் துறந்தால் அம்மணம்!

சுத்த சன்மார்க்கத்தின் முக்கிய இலட்சியம் ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமை! அதற்கு தடை சாதி மதம்! "சாதியும் மதமும் சமயமும் தவிர்த்தே சத்தியச் சுத்தசன் மார்க்கத்தில் கலந்திட அழைக்கிறேன் வாரும் உலகோரே என்றார் வள்ளலார்! எவ்வுயிரும் தம்உயிர்போல் கருதுவதே ஆன்மநேய ஒருமைப்பாடு!

"சாத்திரங்கள் எல்லாம் தடுமாற்றம் சொல்வதன்றி
நேத்திரங்கள் போற்காட்ட நேராவே - நேத்திரங்கள்
சிற்றம்பலவன் திருவருட்சீர் வண்ணம் என்றே
உற்றிங் கறிந்தேன் உவந்து"

- 6-ம் திருமுறை திருவருட்பா

வேதபுராண இதிகாச உபநிஷதங்கள் மற்றும் அனைத்து சாஸ்திர நூற்களிலும் மறைத்தும் இரகசியமாகவும் பரிபாஷையாகவுமே சொல்லப்பட்டிருக்கின்றது. நேத்திரம் என்றால் கண் - நமது கண்ணைப்போல நேரடியாக காட்டாதே! கண்தான் இறைவன் நர்த்தனமிடும் சின்ன அம்பலம் திருச்சிற்றம்பலம்! நம்கண்ணே இறைவன் துலங்குமிடம்! தான் அறிந்த இந்த ஞான இரகசியத்தை உலகுக்கே அறிவிக்கின்றார் உலக குரு வள்ளலார்! யார் தருவார் இப்படி ஒரு ஞான தானம்! வள்ளலாரை தவிர!

ஞானம்பெற கடவுளை வெளியில் தேடாதே! உன்னுள்ளே தேடு! முதலில் இறைவன் திருவடிகளாகிய உன் கண்மணி ஒளியை நாடு! குருவை ஞானசற்குருவை பெற்று, சட்சுதீட்சை, நயன தீட்சை, திருவடிதீட்சை, தச தீட்சை, மெய்பொருள் தீட்சை இப்படி பலவாக சொல்லப்படுவது ஒரே தீட்சை தான்! அதை முதலில் பெறு! உன் இரு கண்களில் அ, உ என்ற 8,2 ல் 10ல் உணர்வை பெறுவது தான் தசதீட்சை! மேற்கூறியதும் இதுதான்! வார்த்தை ஜாலத்தில் யாரிடமும் ஏமாந்து மோசம் போய் விடாதீர்கள்! ஞானத்துக்கு ஒரே தீட்சைதான்! அதுவும் இதுதான்! வேறெதுவும் இல்லை! இல்லை! மனதால் கண்மணி ஒளியை நினைத்து திரும்ப திரும்ப நினைத்து குருகடாட்சத்தால் பெற்ற உணர்வில்லயித்து உணர்ந்து உணர்ந்து இருப்பதுவே தவம்! ஞானதவம்! இதுதான் மானஸ பூஜை! அரிதினும் அரிதான மிக உயர்ந்த ஞானம்!

சத்திய ஞான சபையை கட்டி உலகுக்கு அர்ப்பணித்த வள்ளல் பெருமான் சன்மார்க்க சங்கத்திற்கென ஒருகொடியும் உருவாக்கினார். இதுவும் ஞானத்தை வெளிப்படுத்தவே! அகத்தில் கண்ட ஒளி நிறமே! மேல் பகுதி சிறிது மஞ்சளாகவும் கீழே பெரும்பகுதி வெள்ளையாகவும் உள்ளதே சன்மார்க்க கொடி! 22-10-1873 ஸ்ரீமுக வருடம் ஐப்பசி மாதம் 7ம் தேதி செவ்வாய் கிழமை காலை 8 மணிக்கு மேட்டுகுப்பம் சித்திவளாக திருமாளிகை புறத்தே சன்மார்க்க

கொடி ஏற்றி அன்பர்களிடையே பேருபதேசம் வழங்கினார். உலககுரு வள்ளலார்! மஹா உபதேசம் என அன்பர்களால் அழைக்கப்படுகிறது.

உலககுரு வள்ளலார் திருவருட்பிரகாச வள்ளல் இராமலிங்க சுவாமிகள் அவர்கள் ஸ்ரீமுக வருடம் சன்மார்க்க கொடி வழங்கிய அடுத்தமாதம் கார்த்திகை மாதம் திருக்கார்த்திகை தீபத்திருநாளன்று, எல்லா ஊர்களிலும் எல்லா கோவில்களிலும் வீடுகள்தோறும் தீபமேற்றி வழிபடும் புனித நாளன்று மேட்டுக்குப்பம் சித்திவளாக திருமாளிகை உள் இருந்த விளக்கை புறத்தேவைத்து "இதை தடைபடாது ஆராதியுங்கள்" என்று திருவாக்கு அருளினார்கள்! "ஆண்டவர் இப்போது தீப முன்னிலையில் விளங்குகின்ற படியால் உங்களுடைய காலத்தை வீணிற் கழிக்காமல் நினைந்து நினைந்து என்னும் தொடக்கமுடைய ஞானசரியை 28 பாடலிற் கண்டபடி தெய்வ பாவனையை இந்த தீபத்தில் செய்யுங்கள். நானிப்போது இந்த உடம்பிலிருக்கிறேன் இனி எல்லா உடம்பிலும் புகுந்து கொள்வேன்" என திருவாய் மலர்ந்தருளினார்கள்!!

சன்மார்க்கம் பேசும் ஒவ்வொருவரும் இந்த உபதேசத்தை, வள்ளல் பெருமானின் ஞான கருத்துக்களை அவசியம் உணரவேண்டும்!

தீபத்தை பார்த்து இருக்கவேண்டும்! கண்ணை மூடிக்கொண்டு தீபத்தின் முன் அமர்ந்து என்ன பயன்! கண்ணை மூடிக்கொண்டு தியானம் செய்கிறேன் என்று எந்த சன்மார்க்கியாவது சொன்னால் அவன் முட்டாள்! கண்ணை திறந்து தீபத்தை பார்!

ஞானசரியை 28 பாடல் நினைந்து நினைந்து இதை புரிந்து தவம் செய்யவேண்டும். கண்ணை மூடி இருந்தால் உணர்வுவராதே! கற்பனைதான் மாயைதான் உண்டாகும்! கண்ணைதிற நினை உணர் இதுதான் தியானம் தவம் ஞான சாதனை!

வள்ளலாரே சொல்லியிருக்கிறார் இதையாவது புரிந்து கொண்டீர்களா? இனியாவது கண்ணைதிறந்து விழித்திருந்து தியானம் செய் சன்மார்க்கியே!

இவை எல்லாவற்றுக்கும் மேலாக நம் உலக குரு வள்ளலார் அடுத்து சொன்னதுதான் உலக மகா அதிசயம் அற்புதம் பேரானந்தம் நல்கும் உபதேசம்! நாம் செய்த புண்ணியம் ஒப்பற்ற ஞானி உலககுரு திருவருட்பிரகாச வள்ளலார் இராமலிங்கசுவாமிகள் அவர்களே எல்லா உடம்பிலும் புகுந்து கொள்வேன் என்பதுதான்!! எப்படி? தகுந்த ஆச்சாரியார் மூலம் உங்கள் நடுக்கண்ணை திறக்கும்போது!!

வள்ளல்பெருமான் சொன்னபடி உண்மையான சன்மார்க்கியாக வாழும், தகுந்த ஆச்சாரியார் மூலம் தங்கள் நடுக்கண்ணை

திறக்கப்பெற்றுக்கொள்ளும் ஒவ்வொருவர் உடம்பிலும் சூட்சுமமாக ஒளியாக புகுந்துகொள்வார்! இப்படி தீட்சை பெற்று வள்ளல் பெருமானால் ஆட்க்கொள்ளப்பட்டவரே உண்மையான சன்மார்க்கி!!

எத்தனையோ மகான்கள் ஞானிகள் தோன்றினார்கள்! யார் இப்படி நம்மோடு இருந்து வழிகாட்டி நமக்கு மரணமிலா பெருவாழ்வு தருகிறார்கள்?! உலக குரு திருவருட்பிரகாச வள்ளலார் உலகர் மீது கொண்ட கருணைக்கு இரக்கத்துக்கு அன்புக்கு இதுவே சாட்சி!!

"காற்றாலே புவியாலே ககனமத னாலே
கனலாலே புனலாலே கதிராதி யாலே
கூற்றாலே பிணியாலே கொலைக்கருவி யாலே
கோளாலே பிறஇயற்றும் கொடுஞ்செயல்க ளாலே
வேற்றாலே எஞ்ஞான்றும் அழியாதே விளங்கும்
மெய்யளிக்க வேண்டுமென்றேன் விரைந்தளித்தான் எனக்கே
ஏற்றாலே இழிவெனநீர் நினையாதீர் உலகீர்
எந்தைஅருட் பெருஞ்ஜோதி இறைவனைச்சார் வீரே"

- திருவருட்பா

"பெற்றேன் என்றும் இறவாமை பேதம் தவிர்ந்தே இறைவனெனை
உற்றே கலந்தான் நானவனை உற்றே கலந்தேன் ஒன்றானேம்
எற்றே அடியேன் செய்ததவம் யாரே புரிந்தார் இன்னமுதம்
துற்றே உலகீர் நீவிர்எலாம் வாழ்க வாழ்க துனிஅற்றே"

- திருவருட்பா

"அந்தோஈ ததிசயம்ஈ ததிசயம்என் புகல்வேன்
அறிவறியாச் சிறியேனை அறிவறியச் செய்தே
இந்தோங்கு சடைமணிநின் அடிமுடியுங் காட்டி
இதுகாட்டி அதுகாட்டி என்நிலையுங் காட்டிச்
சந்தோட சித்தர் கடந் தனிச்சூதுங் காட்டி
சாகாத நிலைகாட்டிச் சகசநிலை காட்டி
வந்தோடு நிகர்மனம்போய்க் கரைந்தஇடங் காட்டி
மகிழ்வித்தாய் நின்அருளின் வண்மைஎவர்க் குளதே"

- 4-ம் திருமுறை - திருவருட்பா

"சேர்த்தான் பதம்என் சிரத்தே திருஅருட்கண்
பார்த்தான்என் எண்ணம்எலாம் பாலித்தான் - தீர்த்தான்என்
துன்பம்எலாம் தூக்கம்எலாம் சூழாது நீக்கிவிட்டான்
இன்பமெலாம் தந்தான் இசைந்து"

- 6-ம் திருமுறை - திருவருட்பா

"மன் உயிருக்குயிராகி இன்பமுமாய் நிறைந்த
மணியேஎன் கண்ணே என் வாழ்முதலே மருந்தே"

- 6-ம் திருமுறை - திருவருட்பா

"சுத்த வடிவும் சுகவடிவாம் ஓங்கார
நித்த வடிவும் நிறைந்தோங்கு - சித்தெனும்ஓர்
ஞான வடிவும் இங்கே நான்பெற்றேன் எங்கெங்கும்
தானவிளை யாட்டியற்றத் தான்"

- 6-ம் திருமுறை - திருவருட்பா

"ஊன உடம்பே ஒளிஉடம்பாய் ஓங்கிநிற்க
ஞான அமுதெனக்கு நல்கியதே - வானப்
பொருட்பெருஞ் ஜோதிப் பொதுவில் விளங்கும்
அருட்பெருஞ் ஜோதி அது"

- 6-ம் திருமுறை - திருவருட்பா

இப்படி திருவருட்பிரகாச வள்ளல் பெருமான் பிறப்பு முதல் ஒளியுடலாகி அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரோடு கலந்தது வரை எண்ணிலடங்கா அற்புதங்கள் நடந்தது! வள்ளல்பெருமான் பெற்ற பேறுகளே யாரும் பெற்றிராத பெரும்பேறு! "தேவா நின் பேரருளை என்போலப் பெற்றவரும் எஞ்ஞான்றும் சாவாவரம் என் போல் பெற்றவர் எவ்வுலகில் யாருளர்" என்றும் பாடியருள்கிறார்.

"என் மார்க்கம் இறப்பொழிக்கும் சன்மார்க்கந்தானே!" "சன்மார்க்கத்தின் முடிவு சாகாதிருப்பதே!" "சாகாதவனே சன்மார்க்கி!" இதையெல்லாம் உலகுக்கு உரைத்தார்! உணர்த்தினார்! தற்போதும் தோன்றாதுணையாக இருந்தும் உணர்த்துகிறார்!

ஒரு முழுமையான வாழ்வு வாழ்ந்து ஞான தவ வாழ்வை மேற்கொண்ட திருவருட்பிரகாச வள்ளலார் இராமலிங்கசுவாமிகள் அவர்கள் தமது 51 வயதிற்குள் உலகுக்கு, திருவருட்பா 6 திருமுறைகள், தருமச் சாலை, சத்திய ஞானசபை, சித்திவளாகம் அருள் ஞானகொடையாக தந்துள்ளார்! வள்ளலாரின் வாழ்க்கை உலகுக்கு பயனுள்ள வாழ்க்கை! அவர் உபதேசங்கள் மனிதனை ஞானிகளாக்கும்!

"பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும்" என்று சொன்னார்! வாழ்ந்தும் காட்டினார்! வடலூர் இன்று உலகத்துக்கே ஞானம் அருளும் பூமி! தைப்பூச ஜோதி தரிசனம் காணத் தவறாதீர்கள் என்றார் வள்ளலார்!

சத்தியஞானசபை எண்கோண வடிவில் அமைந்துள்ளது. முன்னே சிற்சபை பொற்சபை இருபுறமும் உள்ளது. தைப்பூசத்தன்று சத்தியஞான சபைக்கு வெளியே நின்று காலையில் பார்த்தால் கிழக்கு

திசையில் சூரியன் உதயமாகும். மேற்குதிசையில் பூர்ண சந்திரன் அஸ்தமனமாகும். நடுவில் சத்தியஞான சபையின் உள்ளே ஏழுதிரை நீக்கி ஜோதி தரிசனம் காண்பிப்பார்கள்! இப்படி ஒரு அமைப்பை வள்ளலார் ஏற்படுத்தவே வடலூரை பெருவெளியாக வைத்திருந்தார். வேறு கட்டிடங்களே பக்கத்தில் ஏற்படாதவாறு அமைத்தார். இதுதான் ஞானவிளக்கம். நம் சிரநடுவே உள்ளே நம் ஆத்மஜோதி துலங்குகிறது எப்போது காணலாம்? வலது கண் சூரியன் உதயமும் இடது கண் பூரணசந்திரனும் கண்டால் இருஜோதியும் உள்ளே போனால் உள்உள்ள ஆத்ம ஜோதியை காண தடையான 7 திரைவிலகினால் ஜோதி தரிசனம்!! வெளியே சாட்சிக்காக வள்ளலார் கட்டினார். உள்ளே ஞானதவம் செய்து ஆத்ம ஜோதியை காணனும்! இதுவே மானிட பிறவியின் பயன். வடலூர் வந்து தைப்பூச ஜோதி தரிசனம் காணுங்கள்! உங்கள் உடலூரின் உள்ளே ஆத்மஜோதி தரிசனம் காணலாம்!

உலககுரு வள்ளலார், திருவருட்பிரகாசவள்ளல் இராமலிங்க சுவாமிகள் 1874-ல் தமது 51-வது வயதில், அழியாத நித்திய ஒளிதேகம் பெற்ற அருள்பூரணஞானி 30-01-1874 ஸ்ரீமுக வருடம் தைமாதம் 19-ம் தேதி வெள்ளிக்கிழமை இரவு 12.00 மணிக்கு மேட்டுக்குப்பம் சித்திவளாகம் திருமாளிகையை அன்பர்களிடம் சொல்லி திருக்காப்பிட்டுக் கொண்டு உட்சென்றார்கள்! ஒளியான வள்ளலார் பேரொளியான அருட்பெருஞ்ஜோதி ஆண்டவருடன் ஐக்கியமானார்கள்! ஸ்தூலதேகத்துடன் மக்களுடன் நடமாடிய வள்ளல் பெருமான் மக்கள் கண்களுக்கு புலப்படாது ஒளியானார்!

தகுந்த ஞானாசிரியர் மூலம் சாகாக்கல்வி உபதேசம் பெற்ற ஞானதீட்சை பெற்றவர்களோடு சூட்சும நிலையில் இருந்து காத்தருள்வார்கள்!

வள்ளலார் உரைத்தது பாமரனுக்கு ஜோதி வழிபாடு! - அருட்பா பாராயணம்! - அன்னதானம்! பக்குவிக்கு மானஸபூஜை புறத்தே கண்டஜோதியை அகத்தே காணுதல்! - சும்மா இருத்தல்! ஞானதானம் செய்தல்! இதற்கு தேவை ஒழுக்கம்! அன்பு! பக்தி! இதுதான் சன்மார்க்கம்!!

இதை விடுத்து பிராணாயாமம் அந்தயோகம் இந்தயோகம் என்று எங்கும் போய் உடல் நலமும் பொருளும் இழக்காதீர்கள்!

சன்மார்க்கி என்பவன் தன் கடமையை ஒழுங்காக செய்பவனே! மனைவி மக்களோடு குடும்பத்தோடு சொந்த பந்தங்களோடு சேர்ந்து வாழுங்கள் தாமரை இலை தண்ணீரைப்போல!! யாரையும் வெறுத்து சாமியாராகி காட்டுக்கு ஓட வேண்டாம்! ஊரோடு ஒத்துவாழ்!

வள்ளல்பெருமானின் உபதேசங்களை படி! ஒவ்வொன்றாக நடைமுறைபடுத்திவா! பேராசை கொள்ளாதே! எளிமையாக வாழு! நமது ஒரே இலட்சியம் மரணமிலா பெருவாழ்வு!

வேறெந்த சாதனையும் யோகமுறையும் அப்பியாசங்களும் செய்யவேண்டாம்! மகா மந்திரத்தை மனதுக்குள் சொல்லிக் கொண்டேயிரு! உன் வீட்டில் 24 மணி நேரமும் ஒரு சிறு அகல் விளக்கு எரியும்படி வை! நேரம் கிடைக்கும் போதெல்லாம் ஜோதியின் முன்பு உட்கார்! கண்ணை ஒருபோதும் மூடாதே! கண்ணை திறந்து ஜோதியைப் பார்!

"காணாத காட்சியெலாம் கண்ணில் காணும்" சுத்த சைவ உணவை மட்டுமே உட்கொள்! எவ்வகையிலும் புலால் உண்ணவே கூடாது! புலால் உண்பவர்களோடும் சேராதீர்கள்! உலகில் உள்ள எந்த தீய போதை பழக்கமும் கூடவே கூடாது!

உன்மனைவியை தவிர பிற எல்லா பெண்களையும் எல்லாம் வல்ல ஆதி சக்தியாகவே காண்! அபிராமி பட்டரைபோல! ஞான சாதகர்களோடு எப்போதும் சத்சங்கம் ஏற்படுத்திக்கொள்!

உன்னால் முடிந்த உதவியை செய்தால் போதும்! எல்லோரும் நலமுடன் வாழ இறைவனிடம் பிரார்த்தனை செய்! எந்த புண்ணிய தலத்துக்கும் போ! அங்கும் உட்கார்ந்து ஞானதவம் செய்!

மூட நம்பிக்கைகள் கூடவே கூடாது! இறந்தவரைப் பற்றி கவலைப்படாதே! இருப்பவர் நல்லாயிருக்க ஏதாவது செய்! பரிகாரம் பூஜை கருமாதி, திதி இன்னபிற செயல்களில் இறங்காதே! எல்லாம் வல்ல இறைவனையே தொழு! நம் ஞானகுரு உலககுரு வள்ளலாரிடம் உன் குறையை முறையிடு!

அன்னசத்திரம் ஆயிரம் கட்டலை விட ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல் நன்று என்றார் பாரதியார்! 1 சத்திரம் கட்டி 100 பேருக்கு சாப்பாடு போடலாம் 1000 சத்திரம் கட்டி ஒரு லட்சம் பேருக்கு சாப்பாடு போடுவதை விட எட்டும் இரண்டும் பத்தும் அ,உ என்ற ஞான எழுத்தின் விளக்கம் கூறி ஒரு மனிதன் உருப்பட ஞானதானம் செய்!

வள்ளல் பெருமானின் அருளிச்செயல்களை உலகுக்கு எடுத்துக் கூறு! உலகில் இதுவரை இரகசியமாக இருந்து மறைந்துபோன ஞானத்தை வள்ளல்பெருமானே பத்தொன்பதாம் நூற்றாண்டிலே வெளிப்படுத்தினார். அவர் அடியாராகிய அடியேன் சிவசெல்வராஜ் இன்று உலகெங்கும் இந்த ஞான இரகசியங்களை புத்தகங்களாகவும்,

ஒளிப்பேழையாகவும் படங்கள் இன்னபிற வகையிலும் இணையதளம் WWW.Vallalyaar.com மூலமாகவும் ஞானதானம் செய்து வருகிறேன். எம்மை ஞான சற்குருவாக ஏற்ற எமதருமை சீடர்கள் பலர் ஊர் ஊராக போய் ஞான தானம் செய்து வருகிறார்கள்!!

இறைவன் திருவடிகளே நமது கண்கள்! நமது கண்ணைத்தான் மெய்ப்பொருள் திருவடி புருவமத்தி கரும்பு சிவம்சக்தி சூரியன் சந்திரன் அ,உ எட்டும் இரண்டும் கமலம் நேத்திரம் அட்சம் நயனம் இருதயம் உந்தி முலை அண்டம் திட்டிவாசல் துவார பாலகர்கள் துறைமுகம் ஓடம் தோணி முகமது திருவாவடுதுறை மலை மேரு கணபதி ஆறுமுகம் கண்ணன் பார்த்தன் இப்படி பல நூறு வேறு வேறுபெயர்கள் கண்ணையே குறிக்கும். இதையெல்லாம் குரு உபதேசம் மூலம் அறியலாம்!

வள்ளல் பெருமான் தருமச்சாலை மேட்டுக்குப்பம் இன்னும் பல இடங்களிலும் தம் திருக்கரத்தால் ஏற்றிய தீபம் 150 ஆண்டுகளாக இன்றளவும் ஒளிவிட்டு பிரகாசிக்கும்படி அன்பர்கள் பாதுகாக்கிறார்கள்.

வள்ளல்பெருமான் அன்பர்களிடம் மண்அகல்விளக்கு ஏற்றி அது அணையாமல் இருக்க தகரக் கண்ணாடி கூண்டு உள்வைத்து வழிபடக் கூறியருளினார்! சன்மார்க்க அன்பர்களிடம் கேட்டால் காற்றில் அணையாமல் இருக்கத்தான் கண்ணாடி கூண்டு வைக்கச் சொன்னார் என்பார்கள்! இதை புரிந்து கொண்டால் அவனே சன்மார்க்கி! அவனே ஞான சாதனை புரிய பக்குவமானவனாவான்!

சத்தியஞான சபையின் சிறுவடிவமே தகர கண்ணாடி விளக்கு!! தகர கண்ணாடிவிளக்கின் உள்ளே விளக்கு இருக்கிறது! நாம் வெளியிலிருந்து பார்க்கிறோம் தெரிகிறது! ஏன்? கண்ணாடிகூண்டு ஆனதால் தானே? திரைபோட்டோ, மரக்கதவோ மறைந்திருந்தால் உள்ளே உள்ள ஜோதி தெரியாதல்லவா?! இதையும் வள்ளலார் நமக்கு ஞானம் விளங்கவே விளக்கவே அமைத்து வழிபடச்சொன்னார்! எப்படி? இந்த கண்ணாடி கூண்டு விளக்குதான் நம் கண் அமைப்பு! நம்சிரநடு உள் ஆத்ம ஜோதி உள்ளது உள் உள்ள அகல்விளக்கு போல! வெளியே தெரிவது கண்ணாடி வழியாக! இதுதான் ஞான இரகசியம்!!? நம்கண் மணி மத்தியில் ஊசி முனைதுவாரம் உள்ளது அது கண்ணாடி போன்ற மெல்லிய ஜவ்வால் மூடி இருக்கிறது. தகரகூண்டு விளக்கை தூண்ட கண்ணாடிகதவை திறந்து தூண்டணும் அதுபோல நம் தலை உள் உள்ளஜோதியை தூண்ட கண்ணை மூடியிருக்கும் மெல்லிய ஜவ்வை திறக்கவேண்டும் இதுவே ஏழு திரை என்றும் மும்மலம் என்றும் வழங்கப்படுகிறது. நினைந்து உணர்ந்து நெகிழ்ந்தால் கண்ஒளி பெருகும் கண்மணி திறக்கும் ஒளி உள்புகும் ஆத்ம ஜோதி ஒளிரும்! ஆஹா எப்படிப்பட்ட

அற்புதவிளக்கம் இது தெரியுமா? வள்ளல்பெருமான் என் உள் இருந்து உரைப்பது! இதுவே ஞானநிலை!!

இதுபோன்ற எல்லா ஞானகருத்துக்களையும் அடியேன் உள்ளிருந்து உரைக்க அடியேன் வெளியிட்ட முதல் ஞானநூல் கண்மணிமாலை! 1992-ல் வெளியானது! தொடர்ந்து 39 மெய்ஞ்ஞான விளக்கம் கூறும் நூற்கள் ஞானிகள் சித்தர்கள் வள்ளல் பெருமான் அருளாசியால் வந்தது. உலககுரு வள்ளலார் என்ற இந்த நூல் எமது 40-வது நூல்! எமது 33 வருட ஆன்மீக வாழ்வின் பலன்!

எல்லா உயிர்களும் மரணமிலா பெருவாழ்வு பெற எல்லா இரகசியமும் எல்லோரும் அறிய உரைத்து விட்டேன்! இதுவே என்னை ஞான சற்குருவாக்கிய உலககுரு வள்ளல் பெருமானுக்கு யான் செலுத்தும் காணிக்கை!!

நிறைய எழுதலாம்! இதுபோதும் எளிமையாக சிறியநூலாக இருக்கட்டுமே என கருதி இத்துடன் நிறுத்துகிறேன்! எப்படி வள்ளலார் "உலககுரு" என்பதற்கு, இத்தனை விளக்கம் போதுமென கருதுகிறேன்!

உலகெங்கும் ஞானிகள் பலர்! என்னை ஆட்க்கொண்டு உலகுக்கு என் மூலமாக ஞானதானம் செய்ய வைத்துள்ளார் உலககுரு திருவருட்பிரகாச வள்ளல் இராமலிங்க சுவாமிகள் அவர்கள்!!

"வலிந்து என்னை ஆட்க்கொண்ட வள்ளலே", என்றும் உந்தன் பொற்பாத கமலங்களில் அடியேன் அடைக்கலமே! என்றும் எமது ஞானதானம் ஓங்கி வளர்ந்து சிறக்க உந்தன் பரிபூரண நல்லருள் வேண்டி பணிகிறோம்!

"வள்ளலார் கழல் வாழ்த்தல் வாழ்வாவதே!"
"எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க!"

"சாதியிலே மதங்களிலே சமயநெறி களிலே
சாத்திரச்சந் தடிகளிலே கோத்திரச்சண் டையிலே
ஆதியிலே அபிமானத் தலைகின்ற உலகீர்
அலைந்தலைந்து வீணேநீர் அழிதல்அழ கலவே
நீதியிலே சன்மார்க்க நிலைதனிலே ஞான
நிருத்தமிடும் தனித்தலைவர் ஒருத்தர்அவர் தாமே
வீதியிலே அருட்சோதி விளையாடல் புரிய
மேவுகின்ற தருணம்இது கூவுகின்றேன் உமையே"
- 6-ம் திருமுறை - திருவருட்பா

"ஆதியும் நடுவும் அந்தமும் இல்லா அருட்பெருஞ்ஜோதி என்
உளத்தே
நீதியில் கலந்து நிறைந்தது நானும் நித்தியன் ஆயினேன் உலகீர்
சாதியும் மதமும் சமயமும் தவிர்த்தே சத்தியச் சுத்தசன் மார்க்க
வீதியில் உமைத்தான் நிறுவுவல் உண்மை விளம்பினேன்
வம்மினோ விரைந்தே"

- 6-ம் திருமுறை - திருவருட்பா

"தங்கமே அனையார் கூடிய ஞான
சமரச சுத்தசன் மார்க்கச்
சங்கமே கண்டு களிக்கவும் சங்கம்
சார்திருக் கோயில் கண்டிடவும்
துங்கமே பெறுஞ்சற் சங்கம் நீடூழி
துலங்கவும் சங்கத்தில் அடியேன்
அங்கமே குளிர நின்றனைப் பாடி
ஆடவும் இச்சைகாண் எந்தாய்"

- 6-ம் திருமுறை - திருவருட்பா

"ஆடாதீர் சற்றும் அசையாதீர் வேறொன்றை
நாடாதீர் பொய்உலகை நம்பாதீர் - வாடாதீர்
சன்மார்க்க சங்கத்தைச் சார்வீர் விரைந்தினிஇங்
கென்மார்க்க முமஒன்றா மே".

- 6-ம் திருமுறை - திருவருட்பா

"கரைவின் மாமாயைக் கரும்பெருந் திரையால்
அரைசது மறைக்கும் அருட்பெருஞ் ஜோதி
பேருறு நீலப் பெருந்திரை அதனால்
ஆருயிர் மறைக்கும் அருட்பெருஞ் ஜோதி
பச்சைத் திரையாற் பரவெளி அதனை
அச்சுற மறைக்கும் அருட்பெருஞ் ஜோதி
செம்மைத் திரையாற் சித்துறு வெளியை
அம்மையின் மறைக்கும் அருட்பெருஞ் ஜோதி
பொன்மைத் திரையாற் பொருளுறு வெளியை
அன்மையின் மறைக்கும் அருட்பெருஞ் ஜோதி
வெண்மைத் திரையான் மெய்ப்பதி வெளியை
அண்மையின் மறைக்கும் அருட்பெருஞ் ஜோதி
கலப்புத் திரையாற் கருதனு பவங்களை
அலப்புற மறைக்கும் அருட்பெருஞ் ஜோதி".

- அருட்பெருஞ் ஜோதி அகவல் - திருவருட்பா

"விரைந்து விரைந்து படிகடந்தேன் மேற்பால் அமுதம்
வியந்துண்டேன்
கரைந்து கரைந்து மனம் உருக்க கண்ணீர் பெருகக்
கருத்தலர்ந்தே
வரைந்து ஞான மணம்பொங்க மணிமன் றரசைக் கண்டு
கொண்டேன்
திரைந்து நெகிழ்ந்த தோலுடம்பும் செழும்பொன் உடம்பாய்த்
திகழ்ந்தேனே".

- 6-ம் திருமுறை - திருவருட்பா

"கற்றேன்சிற் றம்பலக் கல்வியைக் கற்றுக் கருணை நெறி
உற்றேன்எக் காலமும் சாகாமல் ஓங்கும் ஒளிவடிவம்
பெற்றேன் உயர்நிலை பெற்றேன் உலகில் பிறநிலையைப்
பற்றேன் சிவானந்தப் பற்றேஎன் பற்றெனப் பற்றினனே"

- 6-ம் திருமுறை - திருவருட்பா

"உலகுயிர்த் திரளெலாம் ஒளிநெறி பெற்றிட
இலகும் ஐந்தொழிலையும் யான்செய்ய தந்தனை"

- அகவல் - திருவருட்பா

"உற்றமொழி உரைக்கின்றேன் ஒருமையினால் உமக்கே
உறவன்அன்றிப் பகைவன் என உன்னாதீர் உலகீர்
கற்றவரும் கல்லாரும் அமிழ்ந்திடக்காண் கின்றீர்
கரணம்எலாம் கலங்கவரும் மரணமுஞ்சம் மதமோ
சற்றும் இதைச் சம்மதியா தென்மனந்தான் உமது
தன்மனந்தான் கன்மனமோ வன்மனமோ அறியேன்
இற்றிதனைத் தடுத்திடலாம் என்னோடுசேர்ந் திடுமின்
என்மார்க்கம் இறப்பொழிக்கும் சன்மார்க்கந் தானே"

- 6-ம் திருமுறை - திருவருட்பா

"நினைந்துநினைந் துணர்ந்துணர்ந்து நெகிழ்ந்துநெகிழ்ந் தன்பே
நிறைந்துநிறைந் தூற்றெழுங்கண் ணீரதனால் உடம்பு
நனைந்துநனைந் தருளமுதே நன்னிதியே ஞான
நடத்தரசே என்னுரிமை நாயகனே என்று
வனைந்துவனைந் தேத்துதும்நாம் வம்மின்உல கியலீர்
மரணமிலாப் பெருவாழ்வில் வாழ்ந்திடலாம் கண்டீர்
புனைந்துரையேன் பொய்புகலேன் சத்தியஞ்சொல் கின்றேன்
பொற்சபையில் சிற்சபையில் புகுந்தருணம் இதுவே"

- 6-ம் திருமுறை - திருவருட்பா

"உருவ ராகியும் அருவின ராகியும் உருஅரு வினராயும்
ஒருவரே உளார் கடவுள் கண்டறிமினோ உலகுளிர் உணர்வின்றி
இருவராம் என்றும் மூவரே யாம் என்றும் இயலும்ஐ வர்கள் என்றும்
எருவராய் உரைத் துழல்வதென் உடற்குயிர் இரண்டுமூன்
றெனலாமே"

\- 6-ம் திருமுறை - திருவருட்பா

"வாடிய பயிரைக் கண்டபோ தெல்லாம்
வாடினேன் பசியினால் இளைத்தே
வீடுதோ றிரந்தும் பசியறாதயர்ந்த
வெற்றரைக் கண்டுளம் பதைத்தேன்
நீடிய பிணியால் வருந்துகின் றோர்என்
நேர்உறக் கண்டுளந் துடித்தேன்
ஈடின்மா னிகளாய் ஏழைக ளாய்நெஞ்
சிளைத்தவர் தமைக்கண்டே இளைத்தேன்"

\- திருவருட்பா

"குருநெறிக் கேஎன்னைக் கூட்டிக் கொடுத்தது கூறரிதாம்
பெருநெறிக் கேசென்ற பேர்க்குக் கிடைப்பது பேய் உலகக்
கருநெறிக் கேற்றவர் காணற் கரியது காட்டுகின்ற
திருநெறிக் கேற்கின்ற துத்தர ஞான சிதம்பரமே"

\- திருவருட்பா

"என்சாமி எனதுதுரை என்உயிர்நா யகனார்
இன்றுவந்து நான்இருக்கும் இடத்தில்அமர் கின்றார்
பின்சாரும் இரண்டரைநா ழிகைக்குள்ளே எனது
பேருடம்பில் கலந்துளத்தே பிரியாமல் இருப்பார்
தன்சாதி உடையபெருந் தவத்தாலே நான்தான்
சாற்றுகின்றேன் அறிந்திதுதான் சத்தியம்சத் தியமே
மின்சாரும் இடைமடவாய் என்மொழிநின் தனக்கே
வெளியாகும் இரண்டரைநா ழிகைகடந்த போதே"

\- 6-ம் திருமுறை கடைசி பாடல் திருவருட்பா

"கண்ணுதலே நின்அடியார் தமையும் நோக்கேன்
கண்மணிமாலை"க்கெனினும் கனிந்துநில்லேன்
பண்ணுதல்சேர் திருநீற்றுக் கோலம் தன்னைப்
பார்த்தேனும் அஞ்சுகிலேன் பயனிலாமே
நண்ணுதல்சேர் உடம்பெல்லாம் நாவாய் நின்று
நவில்கின்றேன் என்கொடிய நாவை அந்தோ
எண்ணுதல்சேர் கொடுந்தீயால் கடினும் அன்றி
என்செயினும் போதாதே எந்தாய் எந்தாய்"

\- 2-ம் திருமுறை - திருவருட்பா

"உலகியலோ டருளியலும் ஒருங்கறியச் சிறியேன்
உணர்விலிருந் துணர்த்தின துயிர்க்குயிராய் விளங்கித்
திலகமெனத் திகழ்ந்தெனது சென்னிமிசை அமர்ந்த
திருவடிகள் வருந்தநடை செய்தருளி அடியேன்
இலகுமனைக் கதவிரவில் திறப்பித்தங் கென்னை
இனிதழைத்தொன் றளித்துமகிழ்ந் தின்னும் நெடுங் காலம்
புலவர்தொழ வாழ்கஎன்றாய் பொதுவில்நடம் புரியும்
பொருளேநின் அருளேமெய்ப் பொருள் எனத்தேர்ந் தனனே"
- 4-ம் திருமுறை - திருவருட்பா

"கரும்பனையாள் என்னிரண்டு கண்களிலே இருந்தாள்
கற்பகப்பொன் வல்லிசிவ காமவல்லி யுடனே
விரும்புமணிப் பொதுவினிலே விளங்கியநின் வடிவை
வினையுடையேன் நினைக்கின்ற வேளையில்என் புகல்வேன்
இரும்பனைய மனம்நெகிழ்ந்து நெகிழ்ந்துருகி ஒருபே
ரின்பமய மாகும்எனில் அன்பர்கண்ட காலம்
அரும்பிமலர்ந் திட்டசிவா னந்தஅனு பவத்தை
யாரறிவார் நீஅறிவாய் அம்பலத்தெம் அரசே"
- 4-ம் திருமுறை - திருவருட்பா

"வாட்டமிலா மாணிக்க வாசகநின் வாசகத்தைக்
கேட்டபொழு தங்கிருந்த கீழ்ப்பறவை சாதிகளும்
வேட்டமுறும் பொல்லா விலங்குகளும் மெய்ஞ்ஞான
நாட்டமுறும் என்னில்இங்கு நானடைதல் வியப்பன்றே"
- 4-ம் திருமுறை திருவருட்பா

"கற்றதென்றுஞ் சாகாத கல்வியென்று கண்டுகொண்டுன்
அற்புதச்சிற் றம்பலத்தில் அன்புவைத்தேன் ஐயாவே"
ஓர்துணைநின் பொன்னடியென் றுன்னுகின்றே னுன்னையன்றி
ஆர்துணையும் வேண்டேனென் அன்புடைய ஐயாவே"
- 5-ம் திருமுறை - திருவருட்பா

**எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க!**


| | |
|---|---|
| அருட்பெருஞ்ஜோதி | அருட்பெருஞ்ஜோதி |
| தனிப்பெருங்கருணை | அருட்பெருஞ்ஜோதி |

நாஞ்சில் ஆப்செட் பிரிண்டர்ஸ், நாகர்கோவில். ✆ : 233853
C-8-I-W-B-Siva-Selvaraj-2021-Ulaga-Guru-Vallalar-new




கன்னியாகுமரி
தங்க ஜோதி ஞான சபை
ஞான சற்குரு சிவசெல்வராஜ்
எழுதி வெளியிட்டது தான் இவை!
வடலூர் சத்திய ஞான சபையில் உண்மை அறிய?
கன்னியாகுமரி தங்க ஜோதி ஞான சபை வருக!

## உலகில் முதலாவதாக ஞான இரகசியங்களை வெளிப்படுத்திய ஞானநூற்கள்!



ஞான தானம் செய்! ஞான தவம் செய்!




சத்திய ஞான சபை, வடலூர்



வள்ளலார் முத்தேக சித்தி பெற்ற

ஆப்செட், நாகர்கோவில். ✆ : (04652) 233853